Vol.24 | No. 2 | February 2020

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

2020 JANUARY 19
KALIYAL FORANE INAGURATION

2020 JANUARY 22
TNBC - HALF YEARLY
MEETING, SANGAMAM

2020 JANUARY 21, TNBC - HOLY MASS,
INAUGURATION OF JUBILEE ACTION PLAN, NAGERCOIL

SABS CONVENT BLESSING- MADURAI

2020 JANUARY 16





CATHOLIC EDUCATION POLICY

SEMINAR - KALLUVILAI

2020 JANUARY 17

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 24 No :02 FEBRUARY 2020

# இறையருள்
# IRAIARUL

*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| உயர் பேராயர் சுற்று மடல் | 08 |
| மறைக்கல்வி | 20 |
| இளையோர் இயக்கம் | 25 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 32 |
| இல்வாழ்வு இயக்கம் | 33 |
| வின்சென்ட்-தே-பவுல் சங்கம் | 34 |
| வரவிருக்கும் முக்கிய நிகழ்வுகள் | 37 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 38 |
| கல்விச் சேவைச் செய்திகள் | 39 |
| Birthdays & Feastdays | 40 |
| மறைவட்டச் செய்திகள் | 41 |
| செங்கோட்டை செய்திகள் | 43 |
| மறைமாவட்ட செய்திகள் | 45 |
| Bishop's Engagements | 47 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/103/2020**

**31 January 2020**

**Dear Readers,**

**Greetings from Bishop's House, Thuckalay!**

As Pope Francis marked 50 years of his priesthood last year, I want to present you some of his reflections on priesthood in this circular, which I thought would be of great help to you in deepening your priesthood. His reflections range from a sense of humour, to a readiness to give one's life, from weariness offered as incense, to a healing healing heart attentive to the wounds of his flock.

Jorge Mario Bergoglio was ordained a Jesuit priest in 1969, just four days before he turned 33 years old. His vocation dates back to 21 September 1953, Feast of St Matthew, the tax collector converted by Jesus. It was during a confession that day, that the future pope had a profound experience of God's mercy. Divine Mercy has characterized his entire priestly life. Pope Francis speaks of priests as quietly leaving everything to engage in the daily life of communities, giving others their own lives, moved, like Jesus, when he sees people exhausted and "like sheep without a shepherd."

Addressing parish priests in Rome on 6 March 2014, the Pope said: "In the image of the Good Shepherd, the priest is a man of mercy and compassion, close to his people and a servant to all ... Whoever is wounded in life, in whatever way, can find in a priest attention and a sympathetic ear ... Wounds need to be treated .... We, priests must be there, close to these people. Mercy first means treating the wounds."

## PRIEST AND THE EUCHARIST

In his homily during the Jubilee for Priests on 3 June 2016, he said: "In the Eucharistic celebration we rediscover each day our identity

as shepherds. In every Mass, may we truly make our own Christ's words: "This is my Body, which is given up for you.' This is the meaning of our life: with these words, in a real way we can daily renew the promises we made at our priestly ordination."

## PRIEST AND THE CONFESSIONAL

The priest plays an important part of his service to God and His people in the confessional, where he can become an expression of God's mercy. Addressing parish priests in Rome on 6 March 2014, Pope Francis said: "It is normal that there be differences in the style of confessors, but these differences cannot regard the essential, that is, sound moral doctrine and mercy. Neither the laziest nor the rigorist bears witness to Jesus Christ, for neither the one nor the other takes care of the person he encounters. The rigorist washes his hands of them: in fact, he nails the person to the law, understood in a cold and rigid way; and the laxist also washes his hands of them: he is only apparently merciful, but in reality he does not take seriously the problems of that conscience, by minimizing the sin. True mercy takes the person into one' care, listens to them attentively, approaches the situation with respect and truth, and accompanies them on the journey of reconciliation."

## PRIEST AND PRAYER

Pose Francis has always said that the priest needs to be, above all, a man of prayer. It is union with God, he says, that overcomes the countless temptations of evil. In his Letter to Priests marking the 160th anniversary of the death of the Cure of Ars, the pope suggests reciting the Rosary every day. "To contemplate Mary," he writes, "is to believe once again in the revolutionary nature of love and tenderness. In her, we see that humility and tenderness are not virtues of the weak but of the strong, who need not treat others poorly in order to feel important- themselves."

## PRIEST AND THE POOR

According to Pope Francis, a priest's spirituality is embodied in the reality of everyday life. His is a prophetic voice in the face of the oppression that tramples on the poor and the weak. In Evangelii gaudium, 183, he writes of how the Church "cannot and must not remain on the side-lines of the struggle for justice." The Kingdom

of God begins here on earth and it is already here that we encounter Jesus: the last judgment will focus precisely on what we have done to Christ in the poor, the sick, strangers, prisoners. We will be judged on how we have love. But, as St John Paul II said, there can be no love without justice."

## PRIESTS RISKING THEIR LIVES

In his Letter to Priests for the 160th anniversary of the death of the Cure of Ars, Pope Francis thanks those priests "who make their lives a work of mercy in regions or situations often inhospitable, distant or situations often inhospitable, distant or abandoned, even at the risk of their own lives." He tanks them "for their courageous and constant example" and invites them not to be discourages, because "the Lord is purifying His Bride and is converting all of us to Himself." In the same Letter, Pope Francis addresses the question of abuse. While confirming his closeness to the victims, he expresses his gratitude "to all those priests who faithfully and generously spend their lives in the service of others."

## PRIEST AND WEARINESS

During the Chrism Mass in St Peter's Basilica, on Holy Thursday 2015, Pope France is spoke openly about "the tiredness of priests," saying it was frequently on his mind. "I think about it and I pray about it often," he said, "especially when I am tired myself. I pray for you as you labour amid the people of God entrusted to your care, many of you in lonely and dangerous places. Our weariness, dear priests, is like incense, which silently rises up to heaven. Our weariness goes straight to the heart of the Father." The pope described this weariness as something positive, because it comes from being in the midst of people:"It is the tiredness of the priest with the smell of sheep."

## PRIEST AND HUMOUR

Pope Francis often reminds priests "the saint is capable of living with joy and a sense of humour." This joy comes from union with Jesus, he says, adding that he himself prays for a sense of humour everyday. In a November 2016 interview with Italy's TV 2000, the pope described how "a sense of humour lifts you up." It is something very human, he said, but it is also close to the grace of God.

## SUPPORT PRIESTS

Pope Francis asks priests to be always close to the people, but at the same time, he asks the faithful to support their priests. During his homily at the Chrism Mass on 28 March 2013, he said: "Dear lay faithful, be close to your priests with affection and with your prayers, that they may always be shepherds according to God's heart."Conscious of sharing in the work of Christ, the head and Shepherd of the Church, let us continue to seek to bring the faithful together into a unified family. Let us come closer to God in prayer, close to our Church, close to the presbytery, to other priests, as brothers, without speaking ill of each other, and close to the People of God. Let us always keep in mind the example of the Good Shepherd who came not to be served but to serve and to seek out and rescue those who were lost.

## CONCLUSION

We are already in the month of February. The celebrations of Christmas and Epiphany have concluded. All of us have benefitted spiritually from these celebrations. In three-week's time we enter the holy season of Lent in preparation for the commemoration of the paschal mysteries of Jesus Christ. During this period, let us prepare our people spiritually to enter into the most important days of our Church. I also want to thank you sincerely for your collaboration and hard work in realising great things in your respective Centres as well as in the Eparchy.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/17/2020

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

நமது தக்கலை மறை மாவட்டம் தொடங்கப்பட்டதன் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் தொடக்கமாக இறைவன் இந்நாள் வரை நமக்கு வழங்கிய அருங்கொடைகளுக்காக அவருக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இவ்விழாவை ஆன்மீக எழுச்சியின் விழாவாகவும் கொண்டாடுகிறோம். "ஆழத்திற்குத் தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" (லூக். 5:4) என்னும் இறைவார்த்தை வெள்ளி விழாவின் மையச்சிந்தனையாக நமக்குத் தரப்பட்டிருக்கின்றது. இவ்வார்த்தைகளைச் சுருக்கி "ஆழத்தில் வலைகளைப் போடுங்கள்" என்னும் சொற்றொடர்களையே மையக்கருத்தாக நாம் கொள்வோம். இயேசுவின் இறைவார்த்தைகளை நம்பி ஆழத்தில் வலை போட்டதால் பெருந்திரளான மீன்கள் கிடைக்கப் பெற்றன. நம்பிக்கையில் ஆழப்பட்டு இயேசுவையே தங்கள் வாழ்வின் மையமாக மாற்றும் பேதுருவும் அவரோடு உடனிருந்த ஏனைய இருவரும் அவருக்காகவே வாழ்வை அர்ப்பணிக்கத் துணிந்தனர். நம்பிக்கையின் சாட்சிகளாயினர். நம்பிக்கையை வலுப்படுத்தி, ஆழப்படுத்தி நற்செய்தியின் ஒளியில் நாம் நடப்பதோடு நற்செய்தியைப் பரப்பும் தளங்களாகவும் நாம் ஒவ்வொருவரும் திகழ நம்மையே நாம் ஆயத்தப்படுத்துவோம். "உலகெங்கும் சென்று படைப்புகளுக்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள்" என்ற இயேசுவின் அடிச்சுவடுகளின்படி வாழ நாம் நம்மையே ஆயத்தப்படுத்துவோம்.

அதற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமைவது செபமும் தவமும் பிறரன்புப் பணிகளுமே ஆகும். நமது மறைமாவட்டத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் தொடக்க நாளில் "வெள்ளி விழாச் செயல் திட்டத் தொடக்கவிழா" - வாகவும், "சமூக மற்றும் பிறரன்புப் பணி நிகழ்வுகளின் தொடக்கவிழா" - வாகவும் கொண்டாடி மகிழவுள்ளோம். தமிழக ஆயர் பேரவையோடு சேர்ந்து இம்மேலான நிகழ்வுகளை நாம் தொடங்க உள்ளோம். அதற்கென 21-01-2020 -ஆம் நாள், நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்தில் மாலை 5.30 மணிக்கு தமிழக ஆயர்கள் வருகையும் 5.45 மணிக்கு ஆயர்களுக்கு வரவேற்பும் 6.00 மணிக்கு சீரோ மலபார் முறையிலான ஆடம்பரக் கூட்டுத்திருப்பலியும் நடைபெறும். தொடர்ந்து 7.45 மணிக்கு நம் மறைமாவட்ட வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின், "செயல் திட்டத் தொடக்கவிழா" மேதகு பேராயர் அந்தோணி பாப்புசாமி அவர்களாலும், "சமூக மற்றும் பிறரன்புப்பணி" நிகழ்வுகளின் தொடக்கவிழா மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்களாலும் நடைபெறவுள்ளது.

முதன்முதலாக தமிழக ஆயர்கள் அனைவரும் நமது மறைமாவட்டத்தில் வந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிக்கின்ற இறையாசீர் நிறைந்த அந்நன்னாளில் நம் மறைமாவட்ட மக்கள் அனைவரும் கலந்துக் கொண்டு அருள்வரங்களைப் பெற்றுக்கொள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்று..... ாவில்

+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

## உயர் பேராயர் சுற்று மடல்
## சீரோ-மலபார் திருத்தொண்டுவாரம்

Prot. No. 1818/2019

**சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் தனது உடன் உழைப்பாளர்களான பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள் மற்றும் பொதுநிலையினருக்கு எழுதுவது.**

**ஈசோ மிசிகாவில் அன்பு சகோதர சகோதரிகளே,**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுதலின்படி 2019 அக்டோபர் மாதம் கத்தோலிக்க திருச்சபையில் அசாதாரண திருத்தொண்டு மாதமாகக் கொண்டாடினோம். திருச்சபையின் திருத்தொண்டு பணிகளை ஊக்கப்படுத்த 1919 நவம்பர் மாதம் பெனடிக்ட் 15-ம் திருத்தந்தை வெளியிட்ட 'மாக்ஸிமும் இல்லுத்' என்ற திருதூது மடலின் நூற்றாண்டை கொண்டாடும் வண்ணமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அசாதாரண திருத்தொண்டு மாதத்தை அறிவித்தார். கத்தோலிக்க திருச்சபை முழுவதும் கடைபிடித்த இந்த திருத்தொண்டு மாதம் நமது திருத்தொண்டு ஆர்வத்தை தூண்டுவதற்கும், திருத்தொண்டு பணிகளை மேலும் ஊக்கப்படுத்தவும் அதற்கான நல் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதற்கும் உதவியாக இருந்தது. அதன் தொடர்ச்சியாகவே வரும் 2020-ம் ஆண்டு ஜனவரி 6 முதல் 12-ம் தேதி வரையுள்ள நாட்களில் சீரோ-மலபார் திருச்சபையின் திருத்தொண்டு வாரமாக கடைபிடிக்க வேண்டுகிறேன்.

'திருத்தொண்டுப் பணிகளை குறித்து அறிதல், திருத்தொண்டர் ஆதல்' என்ற சொற்றொடரை மனதிற்கொண்டு திருத்தொண்டு வாரத்தை இன்னும் பொருள்மிக்கதாக்க திருமுழுக்கு பெற்ற நம் அனைவருக்கும் கடமையுண்டு. இந்தியா நாடு முழுவதும் திருத்தொண்டு பணி செய்ய சீரோ-மலபார் சபைக்கு கிடைத்த அனுமதி நமது கடமையை இன்னும் அதிகபடுத்தியிருக்கிறது. அசாதாரண திருத்தொண்டு மாதத்தை அறிவித்து திருத்தந்தை எழுதிய கடிதத்தில் நம்மை நினைவூட்டியதுபோல ஒரு சபை என்ற நிலையிலும் ஒரு கிறிஸ்தவன் என்ற நிலையிலும் நமது திருத்தொண்டு பணியை நிறைவேற்ற பேரார்வமும் நிரந்தர விழிப்புணர்வும் தேவை. திருத்தொண்டு பணி செய்ய பாதுகாப்பான இடங்களை தேடுவதை தவிர்த்து ஆடம்பரமும் செல்வச்செழிப்பும் நிறைந்த கடந்த காலத்தை நினைத்து வாழாமல்

செயல் வீரத்தோடும் திருத்தொண்டு ஆர்வத்தோடும் நமது அறுவடை நிலைங்களில் நுழைய வேண்டும் என்பதை நினைவூட்டுகின்றேன். தனிமனிதனும், துறவற சமூகங்களும், பங்கு தளங்களும், மறைமாவட்டங்களும் இந்த திருத்தொண்டுப் பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது திருச்சபைக்கு இந்தியா முழுவதும் திருத்தொண்டு பணிபுரிய கிடைத்த வாய்ப்பை கடமை உணர்வோடு பயனுள்ள முறையில் செய்ய இந்த திருத்தொண்டு வாரம் நம்மை வலுப்படுத்தப்படும்.

இந்திய திருச்சபையின் திருத்தொண்டு பணி மிகவும் நன்றாக முன்னோக்கி செல்வதன் முக்கிய காரணி நமது சபையின் அருட்பணியாளர்களுடையவும், இருபால் துறவிகளுடையவும் திருத்தொண்டு ஆர்வமே. இவ்வேளையில், இந்தியாவிலும், இந்தியாவிற்கு வெளியிலும் நற்செய்தி பணியில் துணிச்சலுடன் செயல்படும் ஆயர்களையும், அருட்தந்தையர்களையும், துறவிகளையும், பொது நிலையினரையும் நன்றியுடன் நினைக்கிறேன். நமது வாழ்க்கை முறை எதுவாக இருந்தாலும் பணித்தளம் எதுவாக இருந்தாலும் திருமுழுக்கு பெற்றவர்கள் என்ற முறையில் திருத்தூது பணியில் வளரவும் பிறரை வளர்க்கவும் உள்ள கடமையும் அழைத்தலும் நமக்கு உண்டு. கடந்த 2019-ம் ஆண்டு மிஷன் ஞாயிறு செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியதும் இதுவே. நமக்கு கிடைத்த இறை வாழ்வு ஒரு விற்பனை பொருளல்ல. மாறாக, அது கொடுப்பதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் முழக்கமிடப்படுவதற்குமான நிதியாகும். 'மிஷன்' என்பதன் பொருளும் இதுவே. இறை வாழ்வு என்பது நமக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை புனித மத்தேயு அறிவித்த நற்செய்தி 10-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் கூறுவது போல "நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்; இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யுங்கள்; தொழுநோயாளரை நலமாக்குங்கள்; பேய்களை ஓட்டுங்கள்; கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்".

நமது திருச்சபையின் மிஷன் செயல்பாடுகளை ஒன்றுபடுத்தலும் மிஷன் தளங்களுக்கு உதவுவதும் 'சீரோ-மலபார் மிஷன் ஃபண்ட்' என்ற திட்டம் சீரோமலபார் சபை அலுவலகமான மவுண்ட் செயின்ட் தோமஸில் செயல்படுவதை நினைவூட்டுகின்றேன். நற்செய்தி பணிக்காகவும், எதிர்கால மிஷன் செயல்பாட்டிற்காகவும் குருத்துவம் மற்றும் துறவறத்தில் நுழைபவர்களின் பயிற்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்த ஃபண்ட்

சேகரிக்கப்படுகிறது. இந்த ஃபண்ட் வழியாக திருத்தொண்டு பணி மெருகூட்டுவதற்கான உதவிகள் தலைமை செயலகத்திலிருந்து கொடுத்து வருகிறோம். திருத்தொண்டு வாரம் கடைபிடிப்பதன் வழியாக நமது சபை உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியே இச்செயல்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

இந்த திருத்தொண்டு வாரத்திலும் தொடர்ந்து வரும் திருத்தொண்டு வாழ்விலும் செய்ய வேண்டிய சில காரியங்களை இந்நேரம் நினைவூட்டுகின்றேன். நற்செய்தியை பரப்ப ஊடகங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும். சமூக வலைதளங்களின் பயன்பாடு பல மடங்கு உயர்ந்து வரும் இக்காலத்தில் அவற்றை மிகவும் பயனுள்ள முறையில் நற்செய்தி பரப்ப பயன்படுத்த வேண்டும். திருச்சபையின் செயல்பாடுகளோடு மிக அதிகமாக ஈடுபடுகின்ற சகோதரங்கள், கூட்டங்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள், திருத்தொண்டு தளப்பயணங்கள் ஆகியவற்றை பங்களவிலும், மறைமாவட்ட அளவிலும் நடத்த வேண்டும். மிஷன் செயல்பாடுக்காக ஆர்வமுள்ள இறை அழைத்தல்களை ஊக்கப்படுத்த வேண்டும். நாம் எங்கிருந்தாலும் எந்த சூழ்நிலையிலிருந்தாலும் பயமற்ற மனிதர்களாக இருக்க மெசியா நம்மை அழைக்கின்றார்.

நற்செய்தி அறிவிக்க கிடைக்கின்ற வாய்ப்புகளை கண்டு பிடித்து பயன்படுத்தி நாம் புது இடங்களை வளர்த்த வேண்டும். திருத்தொண்டு தளங்களின் செயல் திட்டங்களை நமது பங்குகளில் அறிவதற்கு வாய்ப்பு உருவாக்க வேண்டும். திருச்சபை மக்கள் தங்கள் கிறிஸ்தவ அழைத்தலின் பகுதியாக திருத்தொண்டுப் பணியின் கடமையை அனுதினம் தியானிப்பதும்கடவுள் இரக்கத்துடன் அளித்த செல்வத்திலும் நேரத்திலும் ஒரு பகுதியை சபையின் திருத்தொண்டிற்காக பெருந்தன்மையோடு பயன்படுத்தவும்தயாராகவேண்டும்.

நமது விசுவாசத்தின் தந்தை மார் தோமையாரின் திருத்தொண்டு ஆர்வத்தை நாம் ஏற்று துணிச்சல் மிக்க திருத்தொண்டு பணி வழியாக நம் ஆண்டவராகிய ஈசோ மெசியாவின் மறை உடலாகிய திருசபையின் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஒன்றாக முன்னேறுவோம்.

காக்கனாடு மவுண்ட் செயிண்ட் தோமஸ்-இல் உயர் பேராயர் அலுவலகத்திலிருந்து 2019-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் தேதி வழங்கப்பட்டது.

**மிசிகாவில் அன்புடன்**

**கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி**

**சீரோ மலபார் சபையின் உயர் பேராயர்**

குறிப்பு:

1. 2020 ஜனவரி 5-ம் தேதி ஞாயிறு திருப்பலி இடையே சீரோ-மலபார் சபையின் எல்லா பங்குகளிலும், நிறுவனங்களிலும் இந்த சுற்றுமடல் வாசிக்க வேண்டும்.
2. சீரோ-மலபார் மிஷன் வார கொண்டாட்டம் வழியாக கிடைக்கும் நன்கொடைகள் மறைமாவட்ட அலுவலகம் வாயிலாக காக்கனாடு மவுண்ட் அலுவலகத்தில் 2020 பிப்ரவரி 28-க்கு முன் வழங்க வேண்டும்.

---

## உயர் பேராயர் சுற்றுமடல்

Prot. No. 1818/2019

**சீரோ-மலபார் திருச்சபையின் உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான உயர் பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள் மற்றும் இறைமக்கள் அனைவருக்கும் எழுதும் சுற்றுமடல்.**

**சாவறா நினைவு ஆண்டு கொண்டாட்டம் - 2020**

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,**

சீரோ-மலபார் திருச்சபையின் உறுப்பினர்களாகிய நம்மை பொறுத்தவரை 2020-ஆம் ஆண்டு ஒரு புனிதமான ஆண்டாகும். செயலாற்றல் மிக்கவரும், தூய வாழ்க்கை வாழ்ந்தவருமான புனித சாவறா குரியக்கோஸ் ஏலியாஸ் அடிகளார் 1871 ஜனவரி 3-ஆம் தேதி விண்ணக வாழ்வை எய்தியதின் 150-ஆம் வருடத்தில் நாம் நுழைகிறோம். கத்தோலிக்க திருச்சபையில் பெயர் சொல்லி அழைக்கப்பட்டு புனிதர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்ட இப்புனிதரை நினைவு கூரவும், அவருடைய வாழ்க்கையிலிருந்து புத்துணர்ச்சிப் பெற்றுக்கொள்ளவும் அவர் வழியாக இறை ஆசீர் பெறுவதற்கும் கிடைக்கும் வாய்ப்பே இந்த புனித சாவறா அவர்களின் விண்ணக வாழ்வின் ஜூபிலி வருடம்.

புனிதர்கள் அனைவரும் நற்செய்தியின் உண்மையை வாழ்வாக்கி உள்ளார்வத்தோடு வாழ்ந்ததோடு, ஆர்வத்தோடு நற்செய்தியை பறைசாற்றி ஈசோமெசிகாவிற்கு சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்கள் தாங்கள் வாழ்ந்த காலங்களில் மட்டுமல்ல மாறாக எக்காலத்திலும் அவர்களுடைய வாழ்க்கை விசுவாசிகளுக்கு ஒரு ஆன்மீக தூண்டுதலாக அமைகின்றது. புனித சாவறா அடிகளாருடைய வாழ்வும் படிப்பினைகளும் எந்நாளும் எக்காலமும் எடுத்து இயம்பப்படுகிறது. திருச்சபையிக்கும் சமூகத்திற்கும் இடையே பலவித ஏற்றத்தாழ்வுகள்

ஏற்பட்ட 19-ஆம் நூற்றாண்டில் பிறந்த புனித சாவறா அடிகளார் அந்நூற்றாண்டில் மட்டுமல்ல திருச்சபையில் எக்காலமும் சுடர்விட்டு எரியும் சுடர்கோபுரமாக திகழ்கிறார்.

புனித சாவறா அடிகளார் அவர்கள் பேதுருவின் அரியணையோடும் ஆயர்களோடும் உள்ள ஒற்றுமையிலும் கீழ்படிதலிலும் உறுதியாக நின்று கொண்டு திருச்சபையின் ஒற்றுமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார் என்பதே அவர் திருச்சபைக்கு செய்த உயரிய கொடை என்று புனித இரண்டாம் ஜான் பால் திருத்தந்தை புனித சாவறா அடிகளாரை பற்றி வரையறுக்கிறார்.

சொந்த மக்களை திருச்சபையில் காணப்பட்ட பிளவுகளிலிருந்தும் (Schism) ஆன்ம அழிவிலிருந்தும் மீட்பதற்கு மட்டுமல்ல சொந்த சமூகத்திலிருந்து ஒரு ஆயரை திருநிலைப்படுத்தப்பட வேண்டும் என்று அன்றைய திருத்தந்தையோடு தங்களது உரிமையைக்கோரும் மனவலிமையும் துணிச்சலும் பெற்றிருந்தார். அவ்வாறு, சீரோ-மலபார் திருச்சபையின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் உரிமைகளுக்குமாக தன்னுடைய வாழ்வை ஒப்புக்கொடுத்த திருச்சபையின் முதல் குருகுல முதல்வரும் இவரே. நம்பிக்கையிலும் புனிதத்துவத்திலும், நேர்மையிலும் இறைமக்களை ஆன்மீகப்பாதையில் வழிநடத்திய ஆன்மீக தந்தையே புனித சாவறா அடிகளார்.

கடவுளை "சொந்த தந்தையாக" காணவும், "உம்மை 'என் தந்தை' என்னும் பெயர் கொண்டல்லாமல் வேறு எந்த பெயராலும் உம்மை அழைக்க முடியவில்லை" என்று ஒரு குழந்தையின் அன்பு மொழியில் கடவுளோடு உள்ள தனிப்பட்ட உறவில் ஜெபிப்பதற்கும், தன்னை கடவுளின் மகனாகவும், மற்ற மனிதர்களை கடவுளின் மக்களாகவும், தன் உடன்பிறப்புகளாகவும் கண்டு அவர்களை அன்பு செய்யவும் பணிவிடை புரியவும் செய்த ஒரு மிகப்பெரிய ஆன்மீக மனிதராய் திகழ்ந்தார். புனித சாவறா அடிகளார் இறைமகனாகிய ஈசோ மெசிய அறிவித்த இறையாட்சியின் கனவுகளை தனதாக்கி தன் வாழ்வை மனித நலனுக்காக ஒப்புக்கொடுத்த மறைத்தொண்டர் ஆவார். "ஈசோ மெசியா பாடுகள்பட்டு இரத்தம் சிந்தி மீட்ட ஒரு மனிதனும் அழிந்துபோகக் கூடாது என்றும், அனைத்து ஆன்மாக்களும் தன் தந்தையின் அருகில் சென்றடைய வேண்டும் என்ற பேரார்வத்தால் ஒளிர்ந்தவர் புனித சாவறா அடிகளார்.

1829 நவம்பர் 29-ஆம் நாளன்று குருத்துவ பட்டம் பெற்று இறைமக்களிடையே இறங்கி வந்த

புது குருவுக்கு தான் அங்கத்தினரான சபையினுடையவும் சமூதாயத்தினுடையவும் பல புகார்கள் அவருக்கு சவாலாக அமைந்தது. தங்களை வழிநடத்துவதற்கும் கற்பிப்பதற்கும் சொந்தமாக ஒரு ஆயர் கூட இல்லாமல், ஆயன் இல்லாத ஆடுகள் போல அலைக்கழிக்கப்பட்ட இறைமக்களின் மறுமலர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் தேவையான வழிமுறைகளை இறைமுன்னிலையில் அமர்ந்து அவர் ஆராய்ந்தார். மனமாற்றம் அடைவதற்குள்ள தூண்டுதலோடு நற்செய்தியை பறைசாற்றி தன்னுடைய வெளிப்படையான வாழ்க்கையை துவங்கிய இறைமகன் மெசியாவைப்போல இறைவார்த்தையை பறைசாற்றுபவராக அவர் இறைமக்களிடையே பணி புரிந்தார். ஞாயிற்றுகிழமைகளில் இறைவார்த்தையை பறைசாற்றவும் பங்குகளில் தியானங்கள் நடத்தவும் வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த காலகட்டங்களில் ஆன்மீக வளர்ச்சிக்காக அவர் தொடங்கிய ஆன்மீக செயல்பாடுகள் இறைமக்களை விசுவாசத்தில் ஆழப்பட வழிவகுத்தது. அறிவும், தூய்மையும் உள்ள நல்ல குருக்களையும் இறைவார்த்தை உரைப்பவர்களையும் உருவாக்க குருத்துவ பயிற்சி கூடங்கள் ஆரம்பித்தார். திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் ஈசோ மெசியா ஒப்புகொடுத்த மறைப்பணியை தொடர்ந்து ஆற்றுவதற்குமாக துறவறத்தாரின் தேவையை புரிந்து கொண்டு **CMI** மற்றும் **CMC** ஆகிய துறவற சபை சமூகங்களும் கன்னியர் இல்லங்களும் உருவாக்கி திருச்சபையில் அர்ப்பணவாழ்வின் மேன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டினார்.

புனித சாவறா அடிகளார் தனக்கு வழங்கப்பட்ட இறைசமூகத்தின் நிலையான வளர்ச்சியை குறிக்கோளாக ஏற்று தன்னுடைய ஆன்மீக செயல்களில் தொலைநோக்கு பார்வையோடு ஈடுபட்டார். அறியாமையை அகற்றி சமூகத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஆலயங்களோடு சேர்ந்து பள்ளிகூடங்களும், அறிவை வளர்க்க உதவும் புத்தகங்கள் அச்சிட அச்சகங்களும், கைவிடபட்டவர்களுக்காக பல இல்லங்களும் புனித சாவறா அடிகளார் நிறுவினார். சாவறா அடிகளாரின் கைவண்ணம் பதிந்த ஒவ்வொரு முயற்சிகளும் ஆன்மாக்களின் மீட்பும் இறைமக்களின் நிலையான வளர்ச்சியையும் குறிக்கோளாக கொண்டிருந்தது என்பதை மறுக்க இயலாது. இறைபிரசன்னத்தில் நிலைத்த செயல்முறைகளும் தடைகளை தாண்டி வேறுபாடுகளை அகற்றி ஒரு சமூகம் உருவாக்க செயல்பட்டதால் சமூக ஆர்வலராகவும் அறியப்பட்டார்.

ஆன்மீக பாதையில் குடும்பங்களை வழிநடத்தி செல்வதில் உலகில் எங்கும் சீரோ-மலபார் திருச்சபை முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பங்களின் வளர்ச்சியில் புனித சாவறா அடிகளாரின் பாதங்களும் பதிந்துள்ளன. நல்ல கிறிஸ்தவ குடும்பம் விண்ணரசுக்கு சமம் என்று கற்பித்து கொண்டு ஒவ்வொரு குடும்பமும் விண்ணரசுக்கு உகந்த வளர்ச்சியடைய வேண்டுமென்ற உயரிய குறிக்கோளை ஒவ்வொரு கிறிஸ்தவ சமூகத்திற்கும் வழங்கினார்.

ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுள்ள குடும்பம் மட்டுமே நிலைநிற்கும் என்றும் அதற்கு தக்கவண்ணம் குழந்தைகளின் வளர்ச்சியை கவனிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இறையன்பில் அடித்தளம் இட்டு ஒருவர் மற்றவரை அன்பு செய்தும் பணிவிடை புரிந்தும் வளர்ச்சி பெற ஒரு தொலைநோக்கு பார்வையை 19-ம் நூற்றாண்டில் புனித சாவறா அடிகளார் இட்டு சென்றதை நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

அன்புமிக்க இறைமக்களே, இவ்வாறு தமது திருச்சபையை அஞ்சா நெஞ்சுடன் வழிநடத்திய இப்புனிதரின் வாழ்க்கையை அடிபடையாக கொண்டு நமது வாழ்வைத் தொடர புனித சாவறா அவர்களின் விண்ணக வாழ்வின் 150-ம் ஆண்டு யூபிலி நினைவு அமையட்டும். அதற்காக ஒருங்கிணைக்கப்படும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து ஆன்மீக வளர்ச்சியடைய இறைமக்களனைவரையும் நான் கேட்டு கொள்கிறேன். புனித சாவறா அடிகளாரை போல திருச்சபையோடுள்ள அன்பில் வாழ்ந்து ஈசோமிசிகாவின் மறைபணி முழுமையடையச் செய்ய எல்லா இறைமக்களையும் தூண்டும் நினைவு ஆண்டாக அமையட்டும் என்று வாழ்த்துகளும் செபங்களையும் உரித்தாக்குகிறேன்.

நம் அன்னையாம் தூய கன்னிமரியாவினுடையவும் நம் தந்தையாம் மார்தோமாவினுடையவும் புனித குரியாக்கோஸ் ஏலியாஸ் அடிகளாருடையவும் பரிந்துரைகள் நமக்கு உதவி புரியட்டும் என்று உங்கள் அனைவருக்காகவும் செபிக்கிறேன். காக்கனாடு மவுண்ட் செயிண்ட் தோமாவிலுள்ள உயர் பேராயர் அலுவலகத்திலிருந்து 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் தேதி வழங்கப்பட்டது.

**மெசியாவில் அன்புடன்**
**கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி**
**சீரோ மலபார் சபையின் உயர் பேராயர்**

# ஆயர்பேரவை சுற்றுமடல்

Prot. No. 0053/2019

**சீரோ-மலபார் திருச்சபையின் உயர் பேராயர், கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி, தன் உடன் ஊழியர்களான பேராயர்களும், ஆயர்களும், அருட்தந்தையர்களுக்கும் மற்றும் எல்லா இறைமக்களுக்கும் எழுதும் சுற்றறிக்கை.**

ஈசோ மெசியாவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே! சீரோ-மலபார் மேஜர் ஆர்க்கி எபிஸ்கோபல் திருச்சபையின் 28-வது ஆயர்பேரவை, தலைமையகமான கக்கநாடு மவுண்ட் புனித தாமஸில் ஜனவரி 10 முதல் 15 வரை என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். மூன்று நாட்கள் தீவிரமான ஜெபம் மற்றும் தியாகத்தின் பின்னர் ஆயர்கள் பேரவையில் நுழைந்தார்கள். ஆயர்பேரவை வெற்றிபெற உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவில் கொள்கிறேன். ஆயர்பேரவை தொடக்க விழாவில் இந்தியாவின் வத்திக்கான் தூதர் ஜான்பாடிஸ்டா தி குவாட்ரோ ஆயர்பேரவையை பற்றி உரையாற்றினார். நமது திருச்சபையில் உள்ள 64 ஆயர்களில் 57 பேர் ஆயர் பேரவையில் கலந்து கொண்டனர். திருச்சபையும் நம் நாடும் சந்திக்கின்ற பலதரப்பட்ட பிரச்சனைகளை பற்றி தீவிரமாக ஆயர்பேரவையில் கலந்தலோசித்து முடிவுகளை எடுக்கப்பட்டது.

**I. விவசாயத் துறையில்**

கேரளாவில் விவசாயத் துறை கடுமையான நெருக்கடியை சந்தித்து வருகிறது.விவசாயகுடும்பங்கள் விவசாயபொருட்களின்விலைகுறைவால் வாழ முடியாமல்அல்லலுறுகிறது.கேரளாவில் தொடர்ச்சியாக வந்த இரண்டு வெள்ளப் பெருக்கு விவசாயிகளைத் தாக்கியதில் விவசாய குடும்பங்கள் துயரத்தில் மூழ்கியது. வனவிலங்கு விவசாயிகளின் உயிருக்கு மற்றும் விவசாய நிலங்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக மாறிவிட்டது. விவசா-யிகளின் இந்நிலையை தீர்க்க பொதுமக்களுடன் திருச்சபை தீவிரமாக ஒன்றிணைய வேண்டும் என்று ஆயர் பேரவையில் முடிவு செய்தார்கள். விவசாயிகளின் தேவைகள் குறித்து அதன் மேல்அரசாங்கத்தின் கவனம்கொண்டுவரப்பட்ட பல்வேறு விவசாயிகள் கூட்டங்கள் நடத்தியமறைமாவட்டத்தை ஆயர் பேரவையில் வாழ்த்தினார்கள். விவசாயிகளின் ஓய்வூதியத்தை மாதத்திற்கு ரூ 10,000 ஆக

உயர்த்தவும், காட்டு விலங்குகள் நாட்டுக்குள் நுழையாமல் இருக்கவும், அரசாங்கத்துடன் விவசாயிகள் சுதந்திரமாக தொடர்பு கொள்ளவும், விவசாயபொருட்களுக்கு முனைவர்எம்.எஸ். சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரை படி விலை நிர்ணயிக்கவும், விவசாய வேலைகளை தேசிய தொழில் திட்டத்தில் சேர்க்கவும், ஆகிய விவசாயிகளின் தேவைகள் அரசாங்கத்தின் முன் வைக்கப்படுகின்றன. விவசாயிகளின்இந் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தின் தரப்பிலிருந்து ஆக்கப்பூர்வமான பதில்கிடைக்கும் என்று ஆயர் பேரவை நம்புகிறது. "அவர் தனது மக்களின் துன்பத்தை கண்டார்; அவர்களின் கூக்குரலைக் கேட்டார்" (விப 3:7) என திருவிவிலியத்தில் வாசிக்கிறோம். நல்ல வானிலையும் செழிப்பும் கிடைக்கபெற்று விவசாயிகள் ஆசி பெற்றிட இறைவனிடம் ஜெபிப்போம்.

**2. குடியுரிமை திருத்தச் சட்டம்**

குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பான நாட்டின் தற்போதைய கவலைகளுக்கு தீர்வு காண மாநில அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என்று ஆயர் பேரவை கேட்டுக்கொள்கிறது. இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க சட்டமியற்றுபவர்கள் உறுதி கொள்ள வேண்டும். அரசியலமைப்பின் அடிப்படை மதிப்புகளில் ஒன்றான மதச்சார்பின்மை இந்த சட்டத்தால் சந்தேகத்துட்படுத்தப்பட கூடாது. செல்வதற்கு வேறு இடம் இல்லாமால் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு மதச்சார்பின்றி நாட்டின் குடியுரிமையை கொடுக்கவேண்டும், என்பதை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என்பதே திருச்சபையின் நிலைப்பாடு. புதிய குடியுரிமைதாரர்களுக்கு குடியுரிமை வழங்கும் போது வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சார பாரம்பரியத்தையும் அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். சில அகதிகளை மத அடிப்படையில் பிரித்து அவர்களுக்கு குடியுரிமை மறுத்து நிரந்தரமாக அகதி முகாம்களில் தங்க வைக்கும் நடவடிக்கை கைவிடப்பட வேண்டும். இது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் சட்டங்களை மீறுவதும், மக்கள் போராட்டங்களை அடக்க வன்முறை கையாள்வதும் உகந்ததன்று. இந்தியாவில் மதச்சார்பின்மையும் சமமான நீதி முறையும் நடைமுறையில் உள்ளது என்பதை ஒவ்வொரு குடிமகனுக்கும் உணர்த்த வேண்டியது அரசின் பொறுப்பு.

**3. சிறுபான்மை நலத் திட்டங்களில் பாகுபாடு**

சிறுபான்மை மக்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அரசு திட்டங்களில் கிறிஸ்தவர்கள்

ஓரங்கட்டப்படுகிறார்கள் என்று ஆயர் பேரவையில் கூறப்பட்டது. சட்டப்படி ஒதுக்கீடு செய்த தொகையில் ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு மட்டுமாக 80 சதவீதத்தை கேரள அரசு ஒதுக்கி விட்டு மீதமுள்ள மீதமுள்ள 20% மற்ற 5 சிறுபான்மை குழுக்களுக்கு ஒதுக்கியுள்ளது. இதை மாற்றி, மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதை நடைமுறைப்படுத்த பேரவை கேட்டுக்கொள்கிறது. சிறுபான்மைத் துறையின் கீழ் 45 க்கும் மேற்பட்ட மையங்கள் அரசு செலவில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்களாக உள்ளன. அனைத்து சிறுபான்மையினருக்கும் அரசாங்கம் சமமாக இருக்க வேண்டும்.மாவட்ட சிறுபான்மை ஒருங்கிணைப்புக் குழுக்களின் உறுப்பினர்களில் கிறிஸ்தவர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது நியாயமா என்பதை அரசாங்கம் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**4. முற்படுத்தப்பட்ட பிரிவுக்குள் பின்தங்கியோருக்கான இட ஒதுக்கீடு.**

முற்படுத்தப்பட்ட பிரிவுக்குள் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவினருக்கு, அரசு சேவைகளுக்கும் உயர் கல்விக்கும் 10% இடஒதுக்கீடு என்ற மத்திய விதியை ஏற்றுக்கொள்வதற்கான கேரள மாநில அமைச்சரவையின் முடிவை ஆயர் பேரவை வரவேற்கிறது. முன்பதிவு செய்யப்படாத கிறிஸ்தவ மதப்பிரிவுகள் அரசாங்க சேவைகளிலிருந்து வெளியேற்றப்படும் தற்போதைய சூழ்நிலையில் இதுநம்பிக்கையின் செயல். எவ்வாறாயினும், இடஒதுக்கீட்டிற்கான ஒரு அளவுகோலாக மத்திய அரசு நிர்ணயித்த நில நிர்ணயம் மாநில அரசு மறுசீரமைப்பது நியாயமற்றது என்று ஆயர் பேரவை மதிப்பீடு செய்தது. மத்திய அரசு நிர்ணயித்த 5 ஏக்கரை 2.5 ஏக்கராக மாநில அரசு குறைத்துள்ளது. ஏற்கனவே பொருளாதார இடஒதுக்கீட்டை அமல்படுத்திய எந்த மாநிலமும் விவசாய நிலங்களின் அளவை மத்திய விதிமுறைகளிலிருந்து குறைக்கவில்லை என்பதால், மாநில அரசும் தனது தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**5. கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை**

உலகளவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பெருகி வரும் துன்புறுத்தல்கள் குறித்து பேரவைத் தந்தையர்கள் கவலை வெளிப்படுத்தினர். கிறிஸ்துமஸ் தினத்தன்று நைஜீரியாவில் நடந்த கிறிஸ்தவ படுகொலை மனித மனசாட்சியை உலுக்கியுள்ளது. கேரளா மற்றும் பிற மாநிலங்களில் காதல் என்னும் திரையின் பின் நடத்தும் இளம்பெண்களின் கொலைகளை மிகுந்த சிரத்தையுடன் மனதில் கொள்ள வேண்டும். மத நல்லிணக்கத்தையும் சமூக அமைதியையும் வெறுப்பு

அரசியலால் நெறிதவறச் செய்யும் போதகர்கள் கேரளாவில் அதிகரித்து வருகிறார்கள். இது கவலை அளிக்கிறது. கிறிஸ்தவ இளம்பெண்களைக் குறிவைக்கும் போக்கும் பெருகி உள்ளது. ஐ.எஸ். போன்ற தீவிரவாத அமைப்புகளின் பால் கிறிஸ்தவ இளம்பெண்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். இவ்வுண்மைகள் நம் கண்களைத் திறக்க வேண்டும். பல்வேறு மதத்தினருக்கிடையான சுமுக உறவுக்கு குந்தகம் விளைவிக்கும், தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தீச்செயல்களை போக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள ஆயர் பேரவை கேட்டுக் கொள்கிறது. இளம் பெண்களை குறிவைக்கும் செயல்களில் அடங்கியுள்ள ஆபத்துக்களைக் குறித்த விழிப்புணர்வை பெற்றோர் பெற்றிருப்பதோடு, அதை பிள்ளைகளுக்கு உணர்த்தவும் வேண்டும்.

**6. ஆராதனை முறை**

1989 இல் சீரோ-மலபார் திருச்சபையின் திருப்பலியில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தம், சபையின் நீண்ட நாள் கனவாக இருந்தது. திருப்பலியில் கொண்டு வர வேண்டிய மாற்றங்களைக் குறித்து ஆயர்கள் நீண்ட நேரம் விவாதித்தனர். பல்வேறு மறைமாவட்டங்களிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், மைய திருவழிபாட்டு ஆணையமும், சிறப்பு வழிபாட்டுக் குழுவும், நுணுக்கமாக ஆராய்ந்து உருவாக்கிய புது திருப்பலி முறையைக்குறித்த விவாதமாக அது இருந்தது. இறைவேண்டல் மற்றும் தூய ஆவியின் தூண்டுதலுடனும் விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் ஆழமான கலந்துரையாடல்களுக்குப் பிறகு, ஆயர்கள் எங்கள் திருப்பலியின் திருத்தப்பட்ட பிரதிக்கு ஒருமனதாக ஒப்புதல் அளித்தனர். திருத்தப்பட்ட திருப்பலி முறைஉரோமைப் திருப்பீடத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருத்தந்தையின் ஒப்புதலுடன், திருத்தப்பட்ட திருப்பலி முறை நமது சபையில் செயல்படுத்தப்படும். ஒரே முறையிலான திருப்பலி அர்ப்பண முறையை திருச்சபை முழுதும் அமலுக்குக் கொண்டு வரும் விதமாக 1999 ஆம் ஆண்டு ஆயர் பேரவை எடுத்த தீர்மானம் நமது சபையின் அதிகாரபூர்வான நிலைப்பாடாக உள்ளது. திருப்பலி அர்ப்பிக்கும் விதத்தில் சீரான தன்மை நிலவ, அனைவரும் ஒத்தக் கருத்தை நோக்கி முன்னேற ஆயர் பேரவை தீர்மானம் எடுத்தது. "பலிபீடத்தில் விளங்கும்ஒற்றுமை திருச்சபையின் ஒற்றுமையின் அடித்தளமாக இருக்கிறது" என்னும் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களின் சிந்தனை நமக்கு உந்துசக்தியாக மாறட்டும். கடவுளைப் போற்றி நாம் பிட்டு உண்ணும் அப்பமும் இரத்தமும், நம்மை மெசியாவின் உடலாக திருச்சபையின் ஒற்றுமைக்குள் நம்மை ஒருங்கிணைக்கிறது

(1கொரி 10: 16). இதை நாம் எப்போதும் மனதில் கொள்வோம்.

**7. நன்றி, வாழ்த்துக்கள்**

காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் ஆயராக 18 ஆண்டுகள் பணி செய்த மார் மேத்யூ அறைக்கல் அவர்களுக்கு 75 வயது நிறைவடைவதை ஒட்டி பணி நிறைவு செய்கிறார். அவரின் தனித்துவமான சேவைகள், தொலைநோக்குப் பார்வை மற்றும் திருச்சபைக்கான தனி அக்கரை ஆகியவற்றை நன்றியோடு இவ்வேளையில் நினைவில் கொள்கிறோம். காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் துணை ஆயராக பணி புரிந்து வரும் மார் ஜோஸ் புளிக்கல் அவர்கள் ஆயர் மார் மாத்யு அறைக்கல் அவர்களின் வாரிசாக நியமிக்கப்படுகிறார். புதிய பணியை திறம்பட நிறைவேற்ற அவரை வாழ்த்துவதுடன், காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்டத்திற்காக அனைத்து விதமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். பாலக்காடு மறைமாவட்டத்தின் துணை ஆயராக அருட்தந்தை பீட்டர் கொச்சுபுரைக்கல் அவர்களை ஆயர் பேரவை தேர்ந்தெடுத்திருக்கிறது. பணி நியமனம் பெற்றிருக்கும் அருட்தந்தை அவர்களுக்கும், பாலக்காடு மறைமாவட்ட ஆயர் மார் ஜேக்கப் மனத்தோடத் அவர்களுக்கும், பாலக்காடு மறைமாவட்டத்திற்கும், இறையாசியும், அனைத்து நலன்களும் கிடைக்கப்பெற வாழ்த்துகிறோம். உயர் பேராயரின் பதிலாளாக 2019 ஆகஸ்ட் மாத ஆயர் பேரவையின் போது நியமிக்கப்பட்ட பேராயர் மார் ஆண்டணி கரியில் அவர்கள், எர்ணாகுளம்-அங்கமாலி உயர் மறைமாவட்ட பணிகளைக் குறித்து ஆயர் பேரவையில் பேசினார். அவர் பேசியவற்றைக் குறித்து ஆயர் பேரவை விரிவாக விவாதித்தது. மார் ஆன்டணி கரியில் அவர்கள் உயர் மறைமாவட்டத்தில் ஆற்றும் பணிகள், மற்றும் அவரின் செயல்படும் விதத்தைக் குறித்து ஆயர் பேரவை மெச்சியது.

**முடிவு**

வளமானதும் நம்பிக்கையும் நிறைந்த எதிர்காலத்தை நமது திருச்சபைக்காக ஆண்டவர் தம் மனதில் கொண்டிருப்பதாக நாம் அடையாளம் காண்போம் (எரே 29:11). நம் தாய், தூய கன்னி மரியா நம் தந்தை மார்த்தோமா மற்றும் அனைத்து புனிதர்களின் பரிந்துரைகளும் நமக்கு துணையாக இருப்பதாக.

**மெசியாவில் அன்புடன்**

**கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி**

**சீரோ மலபார் சபையின் உயர் பேராயர்**

# CATECHISM
# மறைக்கல்வி

வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர். உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. (திரு.தூத 2:28)

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்.**

## விவிலிய கலைவிழா

### மறைவட்டம் போட்டிகள்

2019-2020 ஆம் ஆண்டு விவிலிய கலைவிழா மறைமாவட்ட போட்டிகள் ஜனவரி 15 புதன்கிழமையன்று படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. படந்தாலுமூடு மறைவட்ட பங்குத்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். கூழுவந்திட்டை மறைக்கல்வி மாணவர்கள் இறைவணக்கப் பாடல் பாட, ஊக்குவிப்பாளர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் வரவேற்புரை கூறினார். தொடர்ந்து ஊக்குவிப்பாளர் திரு. எட்வின்சன் அவர்கள் போட்டி விதிமுறைகளை எடுத்துரைத்தார். மாணவர்கள் மறைவட்ட வாரியாக 6 வரிசைகளில் ஆறு வண்ணக் கொடிகள் ஏந்தி நின்ற காட்சி கண் கவரும் வகையில் அமைந்தது. தொடர்ந்து போட்டிகள் அனைத்தும் 6 அரங்குகளில் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது. மறைவட்ட கலைப் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்கள் சுமார் 450 - க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நிறைவு விழாவில் நமது குருகுல முதல்வர் போருட்கந்தை தோமஸ்

பௌவத்துப்பறம்பில் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கியும், அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு சுழற்கேடயங்களையும் வழங்கி கௌரவித்தார். நமது மறைமாவட்டம் 25 ஆண்டு ஜூபிலி கொண்டாட்டத்தின் நினைவாக இந்த வருடம் முதல் அதிக புள்ளிகள் பெற்ற மறைவட்டங்களுக்கு புதிதாக 3 சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டது.

மறைமாவட்ட விவிலிய கலைவிழா போட்டிகளில் வெற்றி வற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை விபரம்.

| Parish | Points | Rank |
|---|---|---|
| Little Flower, Manjalumoodu | 53 | 1 |
| St. Joseph's, Soosaipuram | 35 | 2 |
| Amal Maria, Cheenivilai | 33 | 3 |
| Holy Family, Arukany | 28 | 4 |
| Sacred Heart, Padanthalumoodu | 25 | 5 |
| St. Xavier's, Varuthattu | 25 | 5 |
| Holy Cross, Malaicode | 23 | 6 |
| St. Thomas', Palukal | 23 | 6 |
| St. Antony's,Vayalinkarai | 20 | 7 |
| St. Thomas', Muzhucode | 20 | 8 |
| Christ the King, Pallapallam | 16 | 9 |
| Jaya Matha, Nithiravilai | 15 | 10 |
| St. Thomas', Netta | 15 | 10 |
| St. Mary's, Kaliyal | 15 | 10 |
| St. Michal's, Kattathurai | 11 | 11 |
| Holy Family, Mukkuttukal | 10 | 12 |
| St. Martin de Porres, Kazhuvanthittai | 10 | 12 |
| St. Francis Assisi, Mezhacode | 9 | 13 |
| St. James', Mangarai | 8 | 14 |
| Deva Matha, Killyoor | 8 | 14 |
| St. Mathew, Annikarai | 6 | 15 |
| St. John Paul II, Kulasekharam | 5 | 16 |
| St. Paul's,Thettiyode | 5 | 16 |
| St. Thomas, Pathukany | 4 | 17 |

| | | |
|---|---|---|
| St. George, Munchirai | 4 | 17 |
| St. Mary's, Thuckalay | 4 | 17 |
| St, Michael's Thettivilai | 3 | 18 |
| Little Flower, Pilankalai | 3 | 18 |
| St. George, Anayadi | 3 | 18 |
| St. Xavier, Kaisalavilai | 3 | 18 |
| Sacred Heart, Pallikonam | 1 | 19 |

**மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகள்**

மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 25 சனிக்கிழமை அன்று கல்லுவிளை மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காலை 10 மணி முதல் மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும் பிற்பகல் 2 மணி முதல் தக்கலை–பிலாங்காலை, சூசைபுரம், ஆறுகாணி மறைவட்டங்களுக்கும் நடைபெற்றது. மதியம் 1 மணிக்கு மறைமாவட்ட அளவில் விவிலிய வினாப் போட்டியும் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. போட்டிகள் 3 அரங்குகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. 6 மறைவட்டங்களிலிருந்து 400 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துக் கொண்டனர்.

**மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகளில் அதிக புள்ளிகள் வம்றவர்களின் விபரம்.**

| Arukany Forane | | |
|---|---|---|
| Netta | 19 | 1 |
| Mezhacode | 17 | 2 |
| Arukany | 8 | 3 |
| Pathukany | 6 | 4 |

| Manjalumoodu Forane | | |
|---|---|---|
| Mukkuttukal | 13 | 1 |
| Muzhucode | 8 | 2 |
| Malaicode | 8 | 2 |
| Marappady | 8 | 2 |
| Kaliyal | 8 | 2 |
| Manjalumoodu | 6 | 3 |
| Karode | 1 | |
| **Nithiravilai Forane** | | |
| Varuthattu | 24 | 1 |
| Nithiravilai | 14 | 2 |
| Munchirai | 8 | 3 |
| Vayalinkarai | 3 | |
| Christhurajapuram | 3 | |
| **Padanthalumoodu** | | |
| Annikarai | 19 | 1 |
| Padanthalumoodu | 14 | 2 |
| Thettyodu | 8 | 3 |
| Kazhuvanthittai | 5 | |
| Palukal | 5 | |
| **Thuckalay- Pilankalai Forane** | | |
| Pilankalai | 16 | 1 |
| Paraicode | 12 | 2 |
| Kaisalavilai | 10 | 3 |
| Kattathurai | 6 | |
| Nagercoil | 6 | |
| Kulasekharam | 1 | |
| **Soosaipuram Forane** | | |
| Soosaipuram | 14 | 1 |
| Mangarai | 13 | 2 |

| | | |
|---|---|---|
| Thakkalivilai | 11 | 3 |
| Pallapallam | 10 | |
| Mathapuram | 3 | |
| Pilankarai | 1 | |

**மறைமாவட்ட இசைக் கருவி போட்டிகள்**

மறைக்கல்வி மாணவர்கள் இசை அறிவை ஊக்கப்படுத்தும் நோக்குடன், ஆயர் அவர்களின் பரிந்துரைப் படி இசைக்கருவி இசைத்தல் போட்டி 2018 முதல் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருடம் மறைமாவட்ட அளவில் ஜனவரி 25 சனிக்கிழமை கல்லுவிளை மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து Key board போட்டியும் இவ்வருடம் முதல் புதிதாக தபலா, வயலின் போட்டியும் நடத்தப்பட்டது. இப் போட்டிகள் காலை 11 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணி வரை 3 அரங்குகளில் நடைபெற்றது. இப் போட்டிகளில் 75 மாணவர்கள் சிறப்பாக Key board தபலா, வயலின் இசைத்தனர். இப்போட்டிகளில் முதல் 3 இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் நமது இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் வழங்கினர். இதற்கு ஒத்துழைத்த அருட்தந்தையர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் நன்றிகள்.

**மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் அதிக புள்ளிகள் வம்றவர்களின் விபரம்.**

மஞ்சாலுமூடு மறைவட்டம் – 121

நித்திரவிளை மறைவட்டம் – 97

படந்தாலுமூடு மறைவட்டம் – 69

சூசைபுரம் மறைவட்டம் – 67

ஆறுகாணி மறைவட்டம் – 56

தக்கலை–பிலாங்காலை மறைவட்டம் – 26

தகவல்கள்

1. February 8 Saturday - H.M Meeting at 2.30 PM at Kalluvilai
2. February 16 Sunday - Bible Quiz Competitions @ Padanthalumoodu @ 2.30 (Diocesan Level)

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்
இயக்குநர்

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கம் - மறைவட்ட இயக்குநர்களின் கூட்டம்**

25.01.2020 அன்று காலை 11.20 மணி அளவில், பிலாங்காலை சி.எம்.ஐ. இல்லத்தில் வைத்து, இளையோர் இயக்கத்தின் மறைவட்ட இயக்குநர்களின் கூட்டமானது நடைபெற்றது. இதில், மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் அருட்தந்தையர்கள், தோமஸ் தெக்கேத்தல சி.எம்.ஐ., ரோபின்ஸ் குழிகோடில், ஜேம்ஸ் கானாகாலில், ஜெபனேஷ் தாமஸ், சுபின் ஸ்காரியா ஆகியோர் பங்கேற்றனர்.

விவாதத்திற்காக எடுக்கப்பட்டவை

### *1. மறைமாவட்ட இளையோர் கலைவிழா*

பிப்ரவரி 21, 2020 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து, காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். மறைமாவட்ட இளையோர் கலைவிழாவில், அனைத்து இயக்குநர்களும் பங்கேற்பதாக சம்மதம் தெரிவித்தனர். இதில் அருட்தந்தை ஜெபனேஷ் மற்றும் அருட்தந்தை சுபின் ஆகியோர், இரண்டு அரங்குகளில் நடக்கும் கலைப்போட்டிகளை கண்காணிப்பதாகவும், அருட்தந்தையர், ரோபின்ஸ் மற்றும் ஜேம்ஸ் கானாகாலில் ஆகியோர் போட்டிகளின் வெற்றியாளர்களின் தேர்வைக் குறித்துக் கண்காணிப்பதாகவும் சம்மதம் தெரிவித்தனர்.

அருட்தந்தையர் சுபின் மற்றும் ஜெபனேஷ் ஆகியோர் முன்தயாரிப்புப் பணிகளில் உதவுதாகவும் தெரிவித்தனர்.

மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்களை சிறப்பு விருந்தினராக அழைப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### *2. தவக்கால தியானம்*

இளையோருக்கான தவக்கால தியானம் 29.03.2020 அன்று பிலாங்காலை கோயில் வளாகத்தில் வைத்து நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. இது மாலை 3.00 மணிக்கு பாவசங்கீர்த்தன ஆயத்த உரை மற்றும் Taize செபத்துடன் ஆரம்பமாகும். இதைத்தொடர்ந்து, பாவசங்கீர்த்தனம் செய்வதற்கான வாய்ப்பு இருக்கும். அவ்வேளையில் ஆராதனை நடைபெறும். சுமார் 6 மணியளவில்,

இளையோர் பங்கேற்கும் சிலுவைப்பாதையுடன் நிறைவுறும். சிலுவைப்பாதைக்காக, பெரிய சிலுவை ஒன்றை இளையோர் கூட்டாக, ஒவ்வொரு மறைவட்ட வாரியாக சுமந்து ஒரு நிலை-யிலிருந்துமறுநிலைவரைகொண்டு செல்வதாக தீர்மானிக்கப்பட்டது. இதற்கான செபங்களை இளையோர் எழுதி தயாரிப்பர். இதை மறைவட்ட இயக்குநர் அவர்கள் கண்காணிப்பார். ஆரம்ப செபத்தை ஆலயத்தில் வைத்து குருவானவர் நடத்துவார். பின்னர், ஆலயத்திலிருந்து இளையோர் சிலுவையை சுமந்து வெளியே வந்து, பள்ளிக்கூட விளையாட்டு அரங்கத்தில் கொண்டு சென்று ஒவ்வொரு நிலை வழியாக கடந்து செல்வர். ஒவ்வொரு நிலைகளையும் ஒவ்வொரு மறைவட்டங்களுக்கும் பிரித்தளிக்கப்பட்டது.

1, 8 நிலைகள் – சூசைபுரம்
3, 10 நிலைகள் – படந்தாலுமூடு
4, 11 நிலைகள் – ஆறுகாணி
5, 12 நிலைகள் – களியல்
6, 13 நிலைகள் – மஞ்சாலுமூடு
7, 14 நிலைகள் – படந்தாலுமூடு

இறுதியில் கஞ்சி அனைவருக்கும் வழங்கப்படும்.

## பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை நித்திரவிளை மறைவட்டம் தலைமையேற்று 16-01-2020 அன்று முஞ்சிறை புனித ஜார்ஜ்யார் ஆலயத்தில் வைத்து நடத்தியது. காலை 11 மணிக்கு முஞ்சிறை புனித ஜார்ஜ்யார் ஆலய பங்குத்தந்தை ஜோமோன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து இளையோர் 'மறைக்கல்வி ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் ஒரு மணி நேரம் வகுப்பு எடுத்தார். மதியம் நித்திரவிளை மறைவட்ட இயக்குநர் தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்கள் பொங்கல் விழாவினை தொடங்கி வைத்தார். வீர விளையாட்டுகளான வடம் இழுத்தல் மற்றும் உறி அடித்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. அனைவரும் பொங்கல் மற்றும் கரும்பு சுவைத்து மகிழ்ந்தனர்.

## Youth Fest 2020

இளைஞர்களின் கூட்டு முயற்சியை வலுப்படுத்தவும், ஆளுமையை வளர்க்கவும் **Youth Fest** 2020 ஜனவரி 17, 18, பிப்ரவரி 2 ஆகிய தேதிகளில் மறைவட்ட அளவில் கொண்டாடப்பட்டது. இதன் விபரம்.

## நித்திரவிளை மறைவட்டம்

| Prove YourSelf | | |
|---|---|---|
| Kanakka.N.S | Nithiravilai | I |
| Jaffer Jio Frouids. J.A | Vayalinkarai | II |
| **Just A Minute Speech** | | |
| Divya | Cheenivilai | I |
| Aneesha.A.R | Varuthattu | II |
| **Group Song** | | |
| Prem kumar, Janalet Raj, Jagadesh Raj, Arun kumar, Abin Jose, Vini Mol, Paulo Shalini | Varuthattu | I |
| Vincil Desy. V.L, Bibisha. R.L, Jino Reshmi. J.K, Dviya. L.J, Rishma Vins. V.C, Jebisha. J, Lathika.V, Anisha.X.V, Sherina. I.M, Jaffer Jio.J, Ligin.V, Sagin. A, Shabin. S.G, Ajith .A.N | Vayalinkarai | II |
| **Group Dance** | | |
| Jagadesh Raj, Janalet Raj, Abin Jose, Sujin kumar, Presm Kumar, Arun Kumar, Dinesh, Akshay | Varuthattu | I |
| Babisha .R.L, Abisha. R, Ashika.A.B, Meenu.B.M, Ancy. R.B, Aswini.M.G, Shabija. S.G | Vayalinkarai | II |

| Mime | | |
|---|---|---|
| Jaffer Jio. J, Ligin. V, Sagin. A, Shabin.S.G, Ajith.A.N, Bibin.W, Sabin.S, Vinith Brango. V.M | Vayalinkarai | I |
| Jagadesh Raj, Janalet Raj, Abin Jose, Sujin kumar, Presm Kumar, Arun Kumar, Dinesh, Akshay | Varuthattu | II |
| Best Choreography | | |
| Paulo Shalini, Augusto Silviya, Vini Mol, Saranya, Jagadesh Raj, Abin Jose, Dinesh | Varuthattu | I |
| Meenu. B.M, Ancy.R.B, Sabija.S.G, Abisha. R, Vincil Desy. V.L, Jaffer Jio.J, Ajin G Dhas | Vayalinkarai | II |

தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்

| Prove YourSelf | | |
|---|---|---|
| Subin Raj | Kaisalavilai | I |
| Reena Femi | Kattathurai | II |
| Just A Minute Speech | | |
| J.Mary Jenisha | Kaisalavilai | I |
| Babisha | Pilankalai | II |
| Group Song | | |
| Ramya, Sharmi, Louisha Mercy, Ancy, Jenisha, Subila | Paraicode | I |
| Aslin Johny, Babin Joe, Sujith Sowmya, Abisha, Beril Shafrin, Adlin Amadsya, Sheeja Mol, Babisha Julit | Pilankalai | II |
| Group Dance | | |
| Reena femi, Angel Sherin, Bibisha, Rema, Shajitha, Benisha, Vinimol, Josephin | Kattathurai | I |
| Babin D.S ,Sujith Sowmya, Abisha, Beril Shafrin, Adlin Amadsya, Sheeja Mol, Babisha Julit, Sujith | Pilankalai | II |

| Mime | | |
|---|---|---|
| Edwitch Rejin, Edwitch Roshan, Subin Raj, Mary Jenisha, Jebarsha, Babisha, Usha | Kaisalavilai | I |
| Reena femi, Angel Sherin, Bibisha, Rema, Shajitha, Benisha, Vinimol, Joshpin | Kattathurai | II |
| Best Choreography | | |
| Reena Femi, Angel Sherin, Bibisha, Rema, Shajitha,Benisha,Vinimol, Josephin | Kattathurai | I |
| Ramya, Sharmi, Louisha Mercy, Ancy, Jenisha, Subila, Francis Vino, Arnisha Raj | Paraicode | II |

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

| Prove YourSelf | | |
|---|---|---|
| Jiji Mol | Muzhucode | I |
| Wins W.L | Manjalumoodu | II |
| Just A Minute Speech | | |
| Anisha | Marappady | I |
| Jiji Mol | Muzhucode | II |
| Group Song | | |
| Blessin, Sajin.L.Dhas, Vijin L. Dhas, Berjin, Anto Divine Raj, Ashick, Jenish, Aswin, Angelin G Raju Ancylin G Rraju, Sujimol, Ananthi, Vinitha, Wins.W.L | Manjalumoodu | I |
| Vinitha, Jebisha, Nithisha, Anju, Helen Sakhitha, Jabin Silu, Divya, Jenisha, Minisha, Athisha, Vinisha, Jerin Jose, Santhosh, Athish | Marappady | II |
| Group Dance | | |
| Babitha Theres, Afsclin, Adharsina, Babitha, Reshma, Sherlin, Jiji Mol | Muzhucode | I |
| Angel, Abisha, Ashmi Dhas, Jeena, Ramya, Monic Devinetia, | Mukkuttukal | II |

| Mime | | |
|---|---|---|
| Rajlal, Abiyouth, Anish Xavier Rj,Bibin Jose, Godwin K, Yobu Raj, Ashwin, Jinu Mon | Muzhucode | I |
| Jenish, Aswin, Benet, Ajith, Sajin,Dominic, Jijo Joseph, Ashick | Manjalumoodu | II |
| Best Choreography | | |
| Doni Sumo, Nishwin, Sanjith Ram, Asha, Ashika, Aishwarya Joy, Reshma | Kaliyal | I |
| Rajlal,Abiyouth,Anish.Xavier Rj,Bibin jose,-Godwin.k,Reshma,Babitha,jijimol | Muzhucode | II |

## சூசைபுரம் மறைவட்டம்

| Prove YourSelf | | |
|---|---|---|
| Snegha J | Palappallam | I |
| John Bosco | Mangarai | II |
| Just A Minute Speech | | |
| Anisha | Palappallam | I |
| Ajo Nimish | Killiyoor | II |
| Group Song | | |
| Nijin, Mercin, Adlin Juhi, Rishika, Snegha, Anisha, Vishma, Jerancy, Ajisha, Varsha, Ajin Harsan. | Palappallam | I |
| Nivetha, Nithisha, Mernisha, Abisha, Anil Mon, Godwin, Santhosh, Shalini, Antin Stefy, John Bosco, Jeronnes | Mangarai | II |
| Group Dance | | |
| Nivetha, Nithisha, Shalini, Meena, Mernisha Antin Stefiy, Abisha | Mankari | I |
| Mary Remi, Ancy R, Monisha.I, Shoba, Daphne J | Soosaipuram | II |
| Mime | | |
| Anil Mon, Santhosh, Jerones, Godwin Sajin, John Bosco, Abishek, Anto Libin | Mankari | I |

| | | |
|---|---|---|
| Asholin, Beffin Bruno, Aswin, Ajith, Ajin, Antro Hydon, Ajo Nimish, Berlin Bruno | Killiyoor | II |
| Best Choreography | | |
| Nivetha, Nithisha, Shalini, Mernisha, Binusha, Abisha, Antin Stefy, | Mankari | I |
| Anisha MArgert, Roxy Beeena. R.I, Ancy .R, Mary Remi, Daphne, Monisha, Ajish.D | Soosaipuram | II |

## படந்தாலுமூடு மறைவட்டம்

| | | |
|---|---|---|
| Prove YourSelf | | |
| Austin.A | Padanthalu-moodu | I |
| Jijish | Kazhuvanthittai | II |
| Just A Minute Speech | | |
| Jerin J | Kazhuvanthittai | I |
| Nijolin Dayana | Kazhuvanthittai | II |
| Group Song | | |
| Nijolin Dayana, Sangeetha, Aruna, Ruba, Jerin | Kazhuvanthittai | I |
| Asha, Anusha, Reshmitha, Ebin Joy, Sona Wilson, Benisha, Abisha, Monish | Padanthalu-moodu | II |
| Group Dance | | |
| Nijolin Dayana, Sangeetha, Aruna, Sowmiya, Ruba | Kazhuvanthittai | I |
| Asha, Reshmitha, Sona Wilson, Benisha, Abisha, Monish | Padanthalu-moodu | II |
| Mime | | |
| Asha, Anusha, Reshmitha, Ebin Joy, Sona Wilson, Benisha, Abisha, Monish | Padanthalu-moodu | I |
| Nijolin Dayana, Sangeetha, Aruna, Sowmiya, Ruba, Jerin | Kazhuvanthittai | II |

| Best Choreography | | |
|---|---|---|
| Asha, Anusha, Reshmitha, Ebin Joy, Sona Wilson, Benisha, Abisha, Monish | Padanthalu-moodu | I |
| Nijolin Dayana, Sangeetha, Aruna, Sowmiya, Ruba, Jerin | Kazhuvanthittai | II |

**மறைமாவட்ட போட்டி**

இளையோர் இயக்கத்தின் மறைமாவட்ட அளவிலான போட்டிகள் Youth Fest 2020 பிப்ரவரி 21 அன்று சங்கமத்தில் வைத்து நடைபெறும். மறைவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடித்தவர்கள் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

**வீஜி.**
**செயலர்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

**" சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். விண்ணரசு இத்தகையோர்களுக்குரியது." (மத் 19:14)**

**பொறுப்பாளர்களின் கூட்டம்** - 19 ம் தேதியன்று சனிக்கிழமை கல்லுவிளையில் வைத்து பொறுப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது. குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்காக முதலில் சில கருத்துக்கள் கூறப்பட்டன. குழந்தைகளை இறை வார்த்தையைப் படிக்க வைத்து ஞாயிற்றுக்கிழமை ஆசிரியரிடம் சொல்ல கற்றுக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல வசனம் எழுதும் பழக்கத்தையும் ஊக்கப்படுத்த வேண்டும். குழந்தைகள் புனிதர்களை பற்றி அறிந்துக் கொள்ள Project தயார் செய்ய கொடுக்கப்பட்டது. இதனை மே மாதத்தில் ஒப்படைக்க வேண்டும். இதிலிருந்து நன்றாக சமர்ப்பித்த குழந்தைகளுக்கு ஆண்டு விழாவின் போது பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கலை நிகழ்வின் நிகழ்வுகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

**அருட்தந்தை**
**ஜோமோன் மங்கலாமடம்**
**இயக்குநர்**

FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மற்றும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கும் மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும். இம்முறை பிப்ரவரி மாதம் 14, 15, 16 ஆகிய 3 நாட்களும் பயிற்சி நடைபெறும். பயிற்சி 14 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து 15 ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு பெற்றோர்களுக்கான பயிற்சியுடன் நிறைவு பெறும். பயிற்சி கட்டணம் ரூபாய் 1000 ஆகும். இடம் தக்கலை சங்கமம்

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

## ஆம்பூர் சி.எம்.சி. கன்னியர் இல்ல அர்ச்சிப்பு

சி.எம்.சி. சபையின் தக்கலை மாகாணத்தின் தலைமையில், தென்காசி பகுதியில், ஆம்பூர் என்னும் இடத்தில், கன்னியர் இல்லமும் முதியோர் இல்லமும் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும் மந்திரிப்பும் பிப்ரவரி 29, 2020 அன்று நடைபெறும்.

# தக்கலை மத்திய சபை

## தக்கலை மத்தியப் பேரவை முப்பெரும் விழா அறிக்கை

தக்கலை மத்திய சபையின் கிறிஸ்மஸ் கூட்டம், கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் 'படுக்கை நோயாளிகள் பராமரிப்பு அலகின்' விளக்க கூட்டம், கிளைத்தலைவர்கள் கூட்டம் என முப்பெரும் விழாவானது 15-12-2019 மத்திய சபையின் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சஜி எம்பாசேரி அவர்கள் படுக்கை நோயாளிகள் பராமரிக்கும் அலகு குறித்தும் அதில் வின்செந்தியர்கள் எந்தெந்த சூழல்களில் பங்கெடுத்து உதவலாம் என்பது குறித்தும் விளக்கி கூறினார். அருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்கள் திட்டங்ஙினாவிளையில் செயல்படும் அலகு குறித்து பேசினார். இதில் சுமார் சுமார் 160 நோயாளிகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் கூறினார். மேலும் ஓர் அலகானது திருநெல்வேலியில் செயல்படுகிறது என்றும் கூறிய அவர், நம்முடைய மறைமாவட்டத்தின் கீழ் இவ்வாறாக மூன்று அலகுகள் செயல்படுகிறது, அவையில் மூன்று ஆம்புலன்ஸ் பயன்படுத்தப்படுவதோடு, தன்னார்வத் தொண்டர்களும் உதவுகிறார்கள் என்று கூறினார்.

கிறிஸ்மஸ் கேக் வெட்டி செய்தி வழங்கிய பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அடிகளார், கிறிஸ்துவின் பிறப்பு பிறருக்காக அமைந்தது போல வின்செந்தியர்களின் வாழ்க்கை பிறருக்காக அமைய வேண்டும் என்று கூறினார். முன்னதாக தலைவர் சகோ ஜய்யாத்துரை அனைவரையும் வரவேற்றார். மறைமாவட்ட வெள்ளிவிழா குறித்து சகோ. சவுந்தர்ராஜ் அவர்கள் விவரித்தார். அதன் முடிவில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டங்களோடு மரம் நடுதல் மற்றும் மரக்கன்றுகள், வழங்குதல்: கிளைசபைகள் குறைந்தது 5 நபருக்காவது இதை கொடுக்க வேண்டும்.
2. குறைந்தது ரூ. 500/- வீதம் 5 மாணவர்களுக்கு கிளைசபைகள் சார்பில் கல்வி உதவித் தொகைகள் வழங்க வேண்டும்.
3. கிளைசபைகள் சார்பில் வழங்கப்பட்டு வரும் சுழற்சி நிதி திட்டங்களை ஒரே நேரத்தில் கொடுக்க ஆவனச் செய்ய வேண்டும்.
4. ஆசாரிப்பள்ளம் நேயாளிகள்

பராமரிப்பு இல்லம் கட்டப்பட நன்கொடைகள் திரட்டப்பட வேண்டும்.

5. ஜூபிலியின் இரண்டாவது ஆண்டில் 25 நபர்களுக்கு சக்கர நாற்காலி வழங்க வேண்டும்.
6. KKSSS செயல்படுத்தி வரும் படுக்கை நோயாளிகள் பராமரிப்பு அலகில் இணைந்து வின்செந்தியர்கள் பணியாற்ற வேண்டும்.
7. கிளைசபை வட்டார சபை சார்பில் 25 நபர்களுக்காவது மாதந்தோறும் உணவுப் பொட்டலம் வழங்க வேண்டும்.

மேற்படி தீர்மானங்களோடு இறுதி செபத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

## கிறிஸ்மஸ் மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் விழா

23-12-10 அன்று பிலாங்காலை வட்டார சபைக்கு உட்பட்ட காட்டாத்துறை கிளைச்சபையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் தலைமையில் நடைபெற்றது. வட்டார சபைத் தலைவர் சகோ. சக்கரியா முன்னிலை வகித்தார். 21-12-2019 அன்று கழுவந்திட்டை ஆலயத்தில் செயல்படும் வின்செந்தியர்கள் தத்து குடும்ப உறுப்பினர்களுக்கு கிறிஸ்மஸ் கேக், தென்னங்கன்று மற்றும் பேரைச் செடி ஆகியவற்றை வழங்கினர். இந்நிகழ்வை அருட்தந்தை ஷோஜோ அவர்கள் தலைமையேற்று நடத்தினார். வட்டார சபைத் தலைவர் சகோ. ஜெபராஜ், சகோதரி லதா முன்னிலை வகித்தனர். 23-12-10 இல் பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் 3 கிளைசபைகளும் இணைந்து அருட்தந்தை ஜான்பால் தலைமையில் கிறிஸ்மஸ் கேக், காய்கனிப் பொருட்கள் மற்றும் ரூ.500/- வீதம் தத்து குடும்பங்களுக்கும் பிற ஏழைக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. சுமார் 25 குடும்பங்கள் பயன்பெற்றனர். மத்திய சபையின் தலைவர் சகோ. ஜய்யாத்துரை முன்னிலை வகித்தார். சூசைபுரம் வட்டார சபைக்குட்பட்ட பிலாங்கரை, தக்காளிவிளை, சூசைபுரம் ஆகிய கிளைச்சபைகள் சார்பில் கிறிஸ்மஸ் விழாவும் மரக்கன்றுகள் வழங்குதலும் நடைபெற்றது. வட்டார சபைத் தலைவர் சகோ சோனிக் ரீகன் கலந்துக் கொண்டார். 24-12-19 நித்திரவிளை கிளைச்சபைகள் சார்பில் 15 குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் கேக், மற்றும் ரூ.500/- வீதம் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. வட்டார சபைத் தலைவர் சகோ ஜோஸ் முன்னிலை வகித்தார். கிறிஸ்துராஜபுரம் கிளைச்சபையும் வாறுதட்டு கிளைச்சபையும் தென்னங்கன்று மற்றும் கேக் ஏழைகளுக்கு வழங்கினர்.

## நலத்திட்ட உதவிகள்

வயலின்கரை கிளைச்சபை சார்பில் அருட்தந்தை றோபின்ஸ் அவர்கள்

தலைமையில் வாரந்தோறும் 25 ஏழைகளுக்கு உணவுப்பொட்டலம் வழங்கப்பட்டு வருகிறது.

நெட்டா கிளைச்சபை சார்பில் 2 மாணவருக்கு தலா ரூ. 1000/- வீதம் ரூ. 2000 மாதந்தோறும் கல்வி உதவி வழங்கி வருகின்றனர்.

பளுகல் கிளைச்சபை சார்பில் அருட்தந்தை ஜேக்கப் ஜயமாத்திர அவர்கள் தலைமையில் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் தென்னங்கன்று வழங்கப்பட்டது.

22-12-19 அன்று முக்கூட்டுகல் கிளைச்சபை சார்பில் ஏழை பெண் ஒருவருக்கு திருமண உதவியாக ரூ. 10,000/- வழங்கப்பட்டது.

### ஈழற்சி திட்டம் வழங்கும் விழா

18-12-19 அன்று காரோடு ஆண்கள் கிளைச்சபை சார்பில் ரூ. 7000/- வீதம் சுமார் 20 நபர்களுக்கும், மகளிர் கிளைச்சபை சார்பில் ரூ. 6000/- வீதம் 18 நபர்களுக்கும் ஆக மொத்தம் ரூ.2,48,000/- சுழற்சி திட்டமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது அருட்தந்தை அஜீஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய சபை திட்டக் கண்காணிப்பாளர் சிபுமோன் மற்றும் வட்டார சபைத் தலைவர் சகோ ஜார்ஜ் முன்னிலை வகித்தனர்.

வாறுதட்டு கிளைச்சபை 19-12-20 இல் 20 நபர்களுக்கு தலா ரூ. 5000/- வீதம் மொத்தம் ரூ 1,00,000/- சுழற்சி திட்டமாக அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் தலைமையில் வழங்கினர். மத்திய சபை வெளிநாட்டு தொடர்பு அலுவலர் சகோ றாபி முன்னிலை வகுத்தார்.

### வட்டார சபைகள் மற்றும் கிளைச்சபைகள் ஆய்வு

களியல், சூசைபுரம், மஞ்சாலுமூடு, நித்திரவிளை ஆகிய வட்டார சபைகளின் 2018-2019 ஆண்டின் வரவு செலவு மற்றும் ஆவணங்கள் தணிக்கை செய்யப்பட்டது. அதோடு அவற்றின் கீழ் செயல்படும் கிளைச்சபைகளும் ஆய்வு செய்யப்பட்டது. இதில் தலைவர் சகோ ஜய்யாத்துரை துணைத் தலைவர் சகோ. சவுந்தர் ராஜ் ஆகியோருடன் மத்தியசப் மற்றும் வட்டார சபை தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவினர் பங்கெடுத்தனர்.

### ஆறுகாணி கிளைச்சபை

ஆறுகாணி லிட்டில் ப்ளவர் கிளைசபையின் சுழற்சி முறையில் சுய தொழில் செய்பவர்களுக்கு கடன் உதவி வழங்கும் கூட்டம் 23-01-2020 அன்று மாலை 3 மணிக்கு ஆன்மிக ஆலோசகர் அருட்தந்தை டோபின் ஆலப்புரக்கல் அவர்கள் தலைமையில் ஆரம்ப ஜெபத்துடன்

ஆரம்பமானது. இக் கூட்டத்தில் மத்திய சபைப் பொருளாளர் சகோதரன் எபிநாகநூலில் அவர்களும் கலந்துக் கொண்டார்.

கிளை சபை தலைவி பிளாரன்ஸ் ஜோஸ் அனைவரையும் வரவேற்றார். ஆன்மிக ஆலோசகர் கடன் கொடுப்பது குறித்தும் கடன் வாங்கும் பயனாளிகள் அதை நல்ல முறையில் பயன்படுத்துவது குறித்தும் எடுத்துக் கூறினார்கள். கூட்டத்தில் 16 நபருக்கு ரூ.5000 வீதமும் 2 நபருக்கு ரூ.10000 வீதமும் மொத்தம் 18 நபருக்கு ரூ.100000 வழங்கப்பட்டது. கூட்டத்தில் பொருளாளர் சகோதரி சின்னம்மா சேவியர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துக் கொண்டனர். கிளை சபைத்தலைவர் சகோதரி லவ்லி ஜோசப் நன்றி கூறினார்.

**சகோ. சாஜன்,**
**செய்தித் தொடர்பாளர்**

| 2020, பிப்ரவரி மாத முக்கிய நிகழ்வுகள் | |
|---|---|
| 2 | மாதர் ஜோதிஸ் ஆண்டு விழா |
| 5-6 | மறைமாவட்ட அருட்தந்தையர்களின் சுற்றுலா |
| 9 | அருட்தந்தை பிலிப் கொடியாந்தராவின் நினைவு நாள் |
| 10 | அருட்தந்தை பிலிப் கொடியாந்தராவின் நினைவுத் திருப்பலி |
| 16 | SABS கன்னியர் இல்லம் ஆர்ச்சிப்பு, மதுரை |
| 11, 12 | அருட்தந்தையர்களுக்கான சிறப்பு வகுப்பு |
| 22 | ஆயர் பேரவை |
| 24 | சாம்பல் திங்கள் |
| 29 | அம்பூர் சி.எம்.சி கான்வென்ட் ஆர்ச்சிப்பு |

## அருட்சகோதரர்களிடமிருந்து...

ஜனவரி மாதம் முதலாம் வாரத்தில் அனைத்து குருமடங்களிலும் வகுப்புகள் துவங்கப்பட்டன. சீரோ மலபார் சபையின் அனைத்து குருமடங்களிலும் தெனகா திருநாள் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**களப்பணி**

பல்வேறு பங்குகளிலும் நிறுவனங்களிலும் பணியாற்றி வரும் அருட்சகோதரர்கள் அனைவரும் ஜனவரி 11 ம் தேதி ஒரு நாள் தியானத்திற்கு முக்கூட்டுகல் இளங்குருமடத்தில் ஒன்று கூடினர். அருட்தந்தை சந்தோஷ் அவர்களால் தியானம் வழங்கப்பட்டது. உரோமையில் இறையியல் படித்து வரும் சகோ ஜோர்ஜ் குட்டியின் முதலாம் ஆண்டின் முதல் பருவத் தேர்வு ஜனவரி மாதம் இறுதியில் துவங்கி பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் முடிவடையும். சகோ ஜோர்ஜ் குட்டிக்கு அனைத்து வித ஜெப வாழ்த்துக்கள்.

**இளங்குருமடம் மூக்கூட்டுகல்**

Home day இளங்குருமடத்தில் 2020 ஜனவரி 25 ம் தேதி நடந்தது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் பேரருட்தந்தை ஜோஸி வறுவேலில் மற்றும் அனைத்து பங்குத்தந்தையர்களும் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை ஜோஸி வறுவேலில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். குருமட அதிபர் தந்தைக்கும் அனைத்து அருட்சகோதரகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். டிசம்பர் மாதம் 28 ம் தேதி மேதகு ஆயர் அவர்களால் அருள் பொழிவு செய்யப்பட்ட அருட்தந்தை ஷிஜோ அவர்கள் சூசைபுரம் பங்கின் உதவிப் பங்குத்தையாகவும், புனித அல்போன்சா கல்லூரியின் துணைத்தாளாளராகவும் நியமிக்கப்பட்டார். அவர்களுக்கும் அனைத்து அருட்சகோதரர்கள் சார்பாக நல்வாழ்த்துக்கள்.

**தலைவர்**

**சகோ. ஜோஸ் புரயிடத்துகுன்நேல்**

# புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## 2020 ஜனவரி மாத நிகழ்வுகள்

19 – 01 – 2020 அன்று புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து மாவட்ட அளவிலான கராத்தே போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியினைக் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். முதல்வர் முனைவர். எஸ். இசையாஸ் அவர்கள் வாழ்த்துரை கூறினார். அருட்பணி வின்ஸ்லால் முன்னிலை வகித்தார். கியோஸி டேவிட், சுதாகரன்பிள்ளை போன்ற சிறப்பு அழைப்பாளர்கள் போட்டிகளை நடத்தினர். இப்போட்டியில் 200 –க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். சன்சைன் பூடோகான் கராத்தே பயிற்சி நிறுவனம் முதல் பரிசை வென்றது.

23 – 01 – 2020 புனித அல்போன்சா கல்லூரியில் கல்லூரி ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில், கலை இயக்குனர் இராஜசேகரன் பரமேசுவரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரைகளும் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

24 – 01 – 2020 அன்று புனித அல்போன்சா கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் 2019 – ல் இளங்கலை மற்றும் முதுகலை பட்ட படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் மு. பிச்சுமணி தனது திருக்கரங்களால் பட்டமளித்து வாழ்த்தினார். மேலும் இவ்விழாவில் தக்கலை மறை மாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், தக்கலை மறை மாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில், கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இசையாஸ் ஆகியோர்களும் கலந்து

கொண்டு பட்டங்கள் பெற்ற மாணவ, மாணவிகளை வாழ்த்தி, தங்களது ஆசிகளை வழங்கினர்.

28 – 01 – 2020 அன்று

புனித தோமஸ் அக்யூனியாஸ் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கல்லூரி நூலக விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், துணை தாளாளர் ஷிஜோ அய்க்கரக்குந்நில், கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இசையாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுளும் வழங்கப்பட்டன.

**இவண்**
**பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ்**
**தாளாளர்**

## BIRTHDAYS OF REV FATHERS

### BIRTH DAYS - JANUARY - 2020

| | |
|---|---|
| Fr. Jose Vayalil | 01 |
| Fr. Shojo Erupathanchilchira | 07 |
| Fr. Linslal Mangalath | 09 |
| Fr. Santhosh Kayyalaparampil CMI | 10 |
| Fr. Jinu Thekkethalackal | 15 |
| Fr. Aneesh Cheruparampil CMI | 16 |
| Fr. Seby Manimalakandathil | 21 |
| Fr. Jipson Chully MCBS | 22 |
| Fr. Peter Kizhakkeyil | 25 |
| Fr. Joshi Kulathumkal | 28 |
| Fr. Prince Maliyil | 28 |

## சூசைபுரம் மறைவட்டம்

### மாங்கரை புனித வியாகப்பர் ஆலயம்

6-1-2020 அன்று தெனகா திருநாளை முன்னிட்டு திருப்பலியின் இடையில் ஆலய முன் பகுதியில் வாழைத்தடையில் அகல் விளக்குகள் அமைத்து கற்சிலுவையில் பங்கு தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் முதல் தீபம் ஏற்றி தொடர்ந்து ஆலய வளாகம் முழுவதும் தீபம் ஏற்றி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 11-1-2020 2 வது சனிக்கிழமை மறைக்கல்வி ஆசிரியர் ஒருவரின் வீட்டில் 7 முதல் 8 மணி வரை பங்கு தந்தை அவர்களின் தலைமையில் அனைத்து ஆசிரியர்களும் இணைந்து ஜெபம் நடத்தினர். 12 ஆம் தேதியன்று மறைக்கல்வி 10 ம் வகுப்பு மாணவர்களின் தனி ஜெபமும் 2 மணி முதல் 4 மணி வரை திருப்பணியாளர்களுக்கான ஜெபமும் நடைபெற்றது. 26 ஆம் தேதியன்று பங்கு பிரதிநிதி கூட்டமும் நடைபெற்றது.

### பாலப்பள்ளம் - கிறிஸ்து அரசர் ஆலயம்

6-1-2020 அன்று மாலை 6.30 மணிக்கு திருப்பலியின் போது ஆலய முன்பக்கம் முழுவதும் மெழுகுவர்த்தி எரிய வைத்து "திருக்காட்சித் திருநாள்" கொண்டாடப்பட்டது. 12-1-2020 பங்கு பேரவைக் கூட்டம் நடந்தது. 19-1-2020 முன்னாள் பங்கு தந்தை அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் கொண்டாட்டமும் திருப்பலியும் நடைபெற்றது. 26-1-2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பெற்றோர் கூட்டம் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காணொலி காட்சி மூலம் வகுப்புகள் நடந்தது. 21 ம் தேதி அன்று நாகர்கோவில் அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற தமிழக ஆயர் பேரவையின் திருப்பலியில் பங்கின் சார்பில் திரளானோர் கலந்து கொண்டனர்.

### சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயம்

15-1-2020 அன்று பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அனைவரும் இணைந்து பொங்கலிட்டு மகிழ்ந்தனர். மறைமாவட்ட அளவில் நடைபெற்ற

மறைகல்வி மாணவர்களின் கலைவிழா போட்டிகளில் 2 ம் இடத்தை பெற்றனர். 25 தேதி அன்று நடைபெற்ற மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகளில் முதலிடம் பெற்றனர். அன்று நமது பங்கில் உதவி பங்கு தந்தையாக அருட்தந்தை ஷிஜோ பதவியேற்றார்.

## நித்திரவிளை மறைவட்டம்

**புனித சவேரியார் ஆலயம் வாறுகட்டு**

26-1-2020 அன்று காலை ஆயர் தலைமையில் ஆடம்பரத் திருப்பலியும் முதல் திருவிருந்து நிகழ்வும் நடைபெற்றது. மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகளில் 24 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றனர்.

**புனித அந்தோணியார் ஆலயம் வயலங்கரை**

கோடி அற்புதர் புனித அந்தோணியார் நவநாள் மற்றும் சிறப்புத் திருப்பலி, ஒப்புரவு வழிபாடு, நற்கருணை ஆராதனை, எல்லா செவ்வாய்கிழமைகளிலும் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். அனைத்து பங்கு மக்களும் பங்கு கொண்டு ஆசி பெறுகின்றனர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**பொங்கல் விழா -**

புனித சூசையப்பர் ஆலயம் காரோட்டில் 15-1-2020 அன்று பொங்கல் விழா பங்குத்தந்தையும் ஆலய மக்களுமாக சேர்ந்து மிக சிறப்பாக கொண்டாடினர்.

**மறைகல்வி போட்டி -**

மறைகல்வி விவிலிய விழா போட்டிகளில் மறைவட்ட அளவிலும் மறைமாவட்ட அளவிலும் முதலிடம் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெராசாள் ஆலயத்திற்கு கிடைத்தது. மறைமாவட்ட அளவில் முதல் இடத்தை மஞ்சாலுமூடு மறைவட்டம் பெற்றது.

**மறைவட்டம் பிரிவு மற்றும் துவக்க விழா -**

19-1-2020 அன்று புனித மரியன்னை ஆலயம் களியலில் வைத்து நமது மறைமாவட்ட ஆயர் தலைமையில் களியல் மறைவட்ட தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் திரளான மக்கள் கலந்து கொண்டார்கள்.

தகவல்: திருமதி செலின் மேரி|திருமதி ஸ்டேகி லதா|திருமதி ஹேமா

## தமிழக ஆயர்களுடன்

## மறைமாவட்ட வெள்ளிவிழா திருப்பலி

21 ஜனவரி 2020, அன்று நாகர்கோவில், அல்போன்சா திருத்தல வளாகத்தில் வைத்து, மறைமாவட்ட வெள்ளிவிழா சிறப்பு திருப்பலியானது ஒப்புக்கொடுக்கப்பட்டது. கூட்டத்தின் போது, மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு ஆன்டணி பாப்புசாமி அவர்கள் மறைமாவட்ட வெள்ளிவிழா செயல்திட்டத்தை வெளியிட்டார்

## செங்கோட்டைச் செய்திகள்

**கிறிஸ்மஸ்கொண்டாட்டம்**

கிறிஸ்து பிறப்பை சிறப்பிக்கும் வகையில் அனைத்து இடங்களிலும் கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது நன்முறையில் கொண்டாடப்பட்டது. டிசம்பர் 20 ம் தேதி பார்டர் புனித ஜோன்ஸ் பள்ளிக்கூடத்திலும் சமூக சேவை மையத்திலும் வாஞ்சி நகர் மாற்றுத்திறன் பள்ளிக்கூடத்திலும் கிறிஸ்மஸ் சிறப்பிக்கப்பட்டது. இவ்விழா 21 ஆம் தியதி புலரி மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கூடத்திலும் புனித ஜோசப் பள்ளிக்கூடத்திலும் மிக நன்முறையில் கொண்டாடப்பட்டது. 23 ம் தேதி காலையில் பார்டர் தையல் மையத்திலும் மதியம் லாலா குடியிருப்பு மருத்துவ சேவை மையத்திலும் மாலையில் தெற்கு மேடு கல்வி நிலையத்திலும் கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

**மிஷன்லீக்**

டிசம்பர் 22 ம் தேதி மிஷன்லீக் உறுப்பினர்களுக்கான கூட்டமானது வாஞ்சி கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை ஜின்ஸ் எம்.சி.பி.எஸ் அவர்கள் வகுப்புகள் நடத்தி மாணவர்களை மகிழ்விக்கும் முறையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது. பின் கேக் முறித்து கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

**குடில் போட்டி**

கிறிஸ்மஸ் குடில் போட்டியானது 24 ம் தேதி நடைபெற்றது. செங்கோட்டை மறைத்தளத்திலுள்ள அனைத்து ஆலயங்கள், கன்னியர் இல்லங்கள், பள்ளிக் கூடங்கள் பார்வையிடப்பட்டு குடில்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில் டொரேத்தியன் விடுதி முதல்

இடத்தையும், புளியரை சி.எம்.சி. கன்னியர் இல்லம் 2 வது இடத்தையும், புனித ஜோஸப் பள்ளிக்கூடம் 3 வது இடத்தையும் பெற்றது. இதை அருட்தந்தை லிஜோ பொறுப்பேற்று நடத்தினார்.

**மறைக்கல்வி எழுத்துப் போட்டிகள்**

மறைக்கல்வி மாணவர்களுக்கான எழுத்துப் போட்டியானது ஜனவரி 5ம் தேதி மதியம் 2.30 மணியளவில் புதூர் புலரி பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. புளியரை, புதூர், வாஞ்சி, மேக்கரை ஆகிய பங்கிலுள்ள மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் இதில் பங்கு பெற்றனர். அருட்தந்தை செபி அவர்கள் இதை பொறுப்பேற்று நடத்தினார்.

**மாதர் ஜோதிஸ் எழுத்துப்போட்டிகள்**

மாதர் ஜோதிஸுக்கான விவிலிய வினாடி வினா எழுத்துப் போட்டி மற்றும் இறைவசனம் எழுதும் போட்டியானது ஜனவரி 5 ஆம் தேதி புதூர் பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது.

**மாதாந்திர தியானம்**

ஜனவரி மாத தியானமானது 11 ஆம் தியதி சனிக்கிழமை வாஞ்சி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. அருட்தந்தை செபி அவர்கள் தியான உரை வழங்கினார். தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. திருப்பலியுடன் தியானம் நிறைவடைந்தது. ஏராளமானோர் இத்தியானத்தில் பங்கு கொண்டு இறையாசீர் பெற்றுச் சென்றனர்

**அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம்**

மறைத்தளத்தில் பணியாற்றுகின்ற அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டமானது ஜனவரி 19 ம் தேதி வாஞ்சி சி.எம்.சி. கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டம் மாலை 6.30 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது. அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் தியான உரை வழங்கினார். தொடர்ந்து கூட்டமானது ஆரம்பமானது. கூட்டத்தில் பக்த இயக்கங்களின் செயல்பாடுகளைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. குடில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மறைக்கல்வி போட்டிகள் பிப்ரவரி 2 ம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. பிப்ரவரி 16 ஆம் தேதி இளைஞர் இயக்கம் சார்பாக பொதுவான போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இறுதியில் அருட்சகோதரி ரீஜா CMC அவர்கள் நன்றிகளை எடுத்துக்கூற அன்பு விருந்துடன் கூடுகை இனிதே நிறைவடைந்தது.

**அருட்தந்தை தோமஸ் தக்கலை**

# மறைமாவட்டச் செய்திகள்

**புளியரை ஆலய அர்ச்சிப்பு**

செங்கோட்டை பகுதியில், புளியரையில் அமைந்துள்ள ஆலயமானது புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமாக இருந்தது. இதன் அடிப்படையில் ஆலயத்தின் புதுப்பித்தல் பணிகளானது ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. ஆலயத்தின் அர்ச்சிப்பானது, மார்ச் 31, 2020 அன்று நடைபெறும். பங்குத்தந்தை செபி மணிமலக்கண்டத்தில் அவர்களுக்கும் பங்கு மக்களுக்கும் வாழ்த்துக்களும் செபங்களும்.

**சீரோ மலபார் திருதூது வாரம்**

சீரோ மலபார் திருத்தூது வாரமானது ஜனவரி 6 முதல் 12 வரை உலகமெங்கும் அனுசரிக்கப்பட்டது. மிஷன் லீக் உறுப்பினர்கள் இதில் பங்கேற்றார்கள்.

**குருக்களுக்கான நியமனங்கள்**

புதிதாக அருட்பொழிவு பெற்ற அருட்தந்தை ஷிஜோ அய்க்கரக்குந்நேல் அவர்கள், சூசைபுரம் பங்கின் உதவிப் பங்குதந்தையாகவும், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணைத்தாளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், முக்கூட்டுக்கல், இளங்குருமடத்தில் ஆசிரியராகவும் பணியாற்றுவார்.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் இல்வாழ்வு இயக்கத்தின் இயக்குநராக பணியாற்றி வந்தார். அவர் அப்பணி-யிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருடைய இடத்தில், உயர் படிப்பை முடித்துத் திரும்பிய அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள், நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவ்விரு நியமனங்களும் ஜனவரி 20, 2020 அன்று நடைமுறைக்கு வந்தது.

**மதுரையில் ஆராதனை சபை துறவறத்தாரின் புது சமூகம்**

இடுக்கி மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.பி.எஸ். அருட்சகோதரிகள் தங்கள் இல்லத்தை மதுரை காமராஜ் பல்கலைக்கழக கட்டிடத்தின் அருகாமையில் தொடங்கி இருக்கிறார்கள். இவ்வில்லத்தின் மந்திரிப்பு ஜனவரி 16, 2020 அன்று நடைபெற்றது.

# தக்கலை சங்கமத்தில்
# தமிழக ஆயர் பேரவைக் கூட்டம்

தமிழக ஆயர் பேரவையின் அரையாண்டுக் கூட்டமானது இவ்வாண்டு, தக்கலை மறைமாவட்டத்தின், சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை மயிலை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு ஜார்ஜ் ஆன்டணிசாமி, மதுரை உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு ஆன்டணி பாப்புசாமி, கோட்டார் மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசை, தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் மேதகு தேவதாஸ் அம்புரோஸ், கோயம்புத்தூர் மறைமாவட்ட ஆயர் தாமஸ் அக்குயினாஸ், சேலம் மறைமாவட்ட ஆயர் எஸ். சிங்ராயன், செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர், மேதகு நீதிநாதன், தர்மபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ், உதகமண்டலம் ஆயர் மேதகு அமல்ராஜ், சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு சூசைமாணிக்கம், வேலூர் மறைமாவட்ட ஆயர் மேதகு சவந்தர ராஜன், கும்பகோணம் மறைமாவட்ட ஆயர் அந்தோணிசாமி, குழித்துறை மறைமாவட்ட ஆயர், ஜெரோம் வறுவேல் தாஸ், திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர், தாமஸ் பால்சாமி, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன் ஆன்டணி, பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர் ஆன்டணிசாமி சவரிமுத்து, கோட்டார் முன்னாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமீஜியுஸ், மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ், தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், ராமநாதபுரம் மறைமாவட்ட ஆயர் மார் பால் ஆலப்பாட், ஓசூர் மறைமாவட்ட ஆயர் செபாஸ்டின் போழோலி ப்பறம்பில் மற்றும் ஆயர் பேரவை செயலர் அருட்தந்தை எல். சகாய ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். கடலூர் பாண்டிச்சேரி மறைமாவட்ட ஆயர் மேதகு ஆன்டணி ஆனந்தராயர் இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை. கூட்டத்தின் தொடக்கத்தில், 21, ஜனவரி 2020 அன்று சங்கமத்தில் புதுப்பிக்கப்பட்ட மார் மாத்யு காவுகாட்டு அரங்கமானது, மதுரை பேராயரால் மந்திரிக்கப்பட்டது.

# BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 10.00 am | Aluva: Jubilee celebration at CMC Generalate |
| 2 | Sun | 10.00 am | Kalluvilai: Family Apostolate anniversary |
| 3 | Mon | 11.00 am | Kanjirapally: Installation of Mar. Jose Pulikkal >> Trichy |
| 4 | Tue | 9.30 am | Trichy: TNBC Health commission Secretaries meeting >> Thuckalay |
| 5,6 | Wed Thu | 10.00 am | Kumarakom: Priests picnic |
| 7 | Fri | 11.30 am | Changanasserry: 90th Birthday celebration of Archbishop Joseph Pawathil |
| 8 | Sat | | Changanaserry: Visiting the benefactors |
| 9 | Sun | 09.30 am | Kayalpuram: Holy Qurbana for Late Fr. Philip Kidiyanthara |
| | | 05.00pm | Punalur: Holy Qurbana at CMI Novitiate >> Senkottai |
| 10 | Mon | 05.00pm | Madurai, K.Pudur: Feast day Mass >> Chennai |
| 11 | Tue | 06.00pm | Polur, Chennai: Feast of Our Lady of Lourdes, Holy Qurbana>> Thuckalay |
| 13-21 | Thu - Fri | 09.30 am | Bangalore: CBCI Meeting |
| 22 | Sat | 10.00 am | Sangamam: Eparchial Pastoral Council Meeting |
| | | 02.00pm | Kalluvilai: Inauguration of Cancer awareness program |
| 23 | Sun | 09.30am | Sangamam: Catholic Laity Council training program |

| | | | |
|---|---|---|---|
| | | 10.30 am | Poovancode: Reception program to new CSI moderator |
| 24 | Mon | 07.00 am | Pilankalai: Ash Monday Holy Qurbana<br>Visitors from North East |
| 25 | Tue | 06.00pm | Visitors from North East<br>Mukkootukkal: Visit to Minor Seminary |
| 26 | Wed | 04.30 pm | Prayer day |
| 27 | Thu | 09.30 am | Sangamam: One day seminary on alternative medicines |
| 28 | Fri | 05.00 pm | Senkottai: Pulari School annual day celebration |
| 29 | Sat | 05.00pm | Amboor: Blessing of CMC convent |

Fr. Sajan Nettaponghu, Bishop's Secretary

அருட்தந்தை பிலிப் தொழியந்தூராவின் நினைவு நாள்

**பிப்ரவரி 9**

2020 JANUARY 23,24
ST.ALPHONSA COLLEGE
ANNUAL DAY, GRADUATION DAY








2020 JANUARY 16
TCYM - PONGAL CELEBRATION
MUNCHIRAI

## 2020 JANUARY 25
## MINOR SEMINARY HOME DAY
## MUKKOOTTUKKAL

## SUNDAY SCHOOL
## BIBLE FEST
## 2019-2020

## THENI
## CINNAMANOOR MISSION STATION

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570